1121

Regd. No. M. 878

தொகுதி 12. * பகுதி 1, 2.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

துன்மதி௵ வைகாசி-ஆனி௴ 1921௵ மே-ஜூன்௴

14 SEP 1921

விஷயங்கள்.

1. தற்கால நிலைமை—அ. அரங்கசாமி ஐயர், பி.ஏ.பி.எல். 1
2. ஸர். டி. சதாசிவையர் அவர்கள்—ஆர். அரங்கசாமி ஐயர்; பி. ஏ. 6
3. தர்ம அதர்ம ஸ்வரூபம்—நஞ்சுண்டப்பா. 9
4. தென் இந்திய பிரஹ்மஞானக் கன்வென்ஷன். 19
5. பூர்வஜன்ம வாஸனை—நஞ்சுண்டப்பா. 22
6. அதீந்திரிய வஸ்துக்களின் உண்மை—ஸர், ஆலிவர் லாட்ஜ். 25
7. முக்கிய அறிவிப்பு— 32
8. உண்மையறிதல்—வரகவி. ந. பாகஷாசஹிபு. 33
9. அர்த்தவான் அல்லது மற்றொரு ஞானியின் சரித்திரம்—எஸ். ஆர். அனந்தநாராயணையர். 37
10. ஸந்தியாவந்தனம்—கே. எஸ். ராமசந்திரையர். 41

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்.

தபால் சார்ஜ் உட்பட வருஷசந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.
1921

2496

30-8-21

படங்களுடன் கூடிய கதைகள்.

சவிர்ஸாபம்—அல்லது சட்டியின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —	ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை
லோககுருவின் அவதாரங்கள்
ஹிந்து என்பவன் எவன்
காயத்திரி
காயத்திரி ராமாயணம்
மகாளயபக்ஷமும் நவராத்திரியும்
அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஷை செய்யுள்
எண்ணங்களின் ரகசியம்
திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
லோககுருவாகிய பரமன் வருவானேன்
தசாவதாரங்களின் உண்மை.

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியானபியாஸ் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம், சன்மார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது.
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(8) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள்

தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம்	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்	ஷை
கல்வி கற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—9—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன் யாது.	0—9—0
எனது பிரதிஜ்ஞை—ஜினராஜதாசர்	0-12—0
யோக உபந்யாசங்கள்—அன்னிபெஸண்டு	0-12—0

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 12	துன்மதி௵ வைகாசி—ஆனி௴ 1921௵ மே—ஜூன்௴	பகுதி 1, 2.

OFFICE ... 14 SEP 1921

தற்கால நிலைமை.

ஒரு யந்திரத்திலுள்ள சக்கிரம் அதிவேகமாய்ச் சுழலுமாயின் அதின் கதியில் எதிர்நோக்கும் வஸ்துக்கள் அதைப் பலமாய்த் தாக்கும். அதினால் இரண்டும் ஒன்றோடொன்று எதிர்ப்பட்டு அதின் பயனாக உஷ்ணம் அதிகரிக்கும். இது சாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இவ்வுஷ்ணத்தைத் தணிப்பதற்காகவே எண்ணெய் முதலிய இளக்கம் செய்யும் பதார்த்தங்களை யந்திரங்களில் உபயோகிக்கின்றனர். லோக ஆசாரியன் அல்லது ஜகத்குருவாகிய பரமன் வருகையானது சமீபிப்பதினால் இவ்வுலகும் அதில் உள்ளவர்களும் அவ்வருகையை ஏற்குமாறு தம்தம் அமைப்பை விரைவில் மாற்றிக்கொண்டு வருகின்றனர். மற்றைய காலங்களில் மெதுவாய்ச் செல்லும் உலகானது இப்போது அதிவேகமாய்ச் செல்லுகின்றது. இக்காரணம்பற்றி உலகத்தில் நேர்ந்த மகத்தான பேரா

ணது முடிவுபெற்ற பின்னரும் குழப்பங்களும் மூரண்களும் இன்னும் நிகழ்ந்துகொண்டு வருகின்றன. நம்முடைய தேசத்திலும் நம்முடைய தேசத்துக்குரிய குழப்பங்களும் மூரண்களும் மற்ற தேசத்துக்குரிய குழப்பங்களையும் மூரண்களையும் காட்டிலும் வேறுபட்டிருந்த போதிலும் மற்ற தேசங்களில் நிகழ்வது போல அச்சம்பவங்கள் இத்தேசத்திலும் நிகழ்கின்றன.

***

நமது தேசத்திற்குரிய சம்பவங்கள் இதர தேசங்களில் நிகழும் சம்பவங்களைக் காட்டிலும் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றனவென்பதை நாம் இங்கு விசாரிக்கத் தகும். நமது தேசத்தில் உலகின் கண்ணுள்ள எல்லா முக்கிய மதங்களைச் சார்ந்தவர்கள் தற்காலம் ஜன்மமெடுத்து நமது தேசத்தை ஜன்ம பூமியாகக் கொண்டாடுகின்றனர். நமது தேசத்தில் ஸநாதன தர்மம் என்ற ஆரியமதம், பௌத்த மதம், ஜைனமதம், பாரஸீக மதம், கிருஸ்துவ மதம், மகமதிய மதம், சீக்கமதம், என்ற சப்தமதங்களையும் கொண்டாடும் மதஸ்தர்கள் குடிகொண்டிருக்கிறார்கள். இதுபோல் இவ்வுலகில் வேறொரு தேசத்தில் இவ்வித பிரபலமான மத வேறுபாடுகள் இல்லை. மேற்கூறிய எழுமதங்களும் பல்லா பிரவருஷங்களாக ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றியவைகளாகையினால் அவைகளின் முக்கிய கொள்கைகளும் உயர்ந்த லக்ஷியங்களும் ஆசாரங்களும், ஸமஸ்காரங்களும் பல வேறுபாடுகளை உடைத்தனவாய்த் தோன்றுகின்றன. எல்லாவற்றிற்கும் பொதுவாயுள்ள தத்துவங்கள் மறைந்து கிடப்பதால், அவைகளைச் சுலபமாய் அறிவது அரிதாகின்றது. இக்காரணம்பற்றி அம்மதங்களைச் சார்ந்தவர்களுள் மதக்குழப்பங்களும் மத வைஷம்யங்களும் ஏற்பட்டு வருவது சாதாரணமாயிருக்கிறது. ஆனால் நமது தேசத்தில் ஐக்கிய பாவம் அதிகரித்து தேசிய உணர்வு மேலிட்டு தேசத்தின் நன்மையையே எல்லா மதஸ்தர்களும் நாடி ஒழுகவே

ண்டுமாகில் இம்மத முரண்கள் விலக்கப்பட வேண்டுவது அவசியமாயிருக்கின்றது. அப்பொழுதுதான் தேசிய நூதன நிர்மாணம் முற்றுப் பெறத்தக்கது;

***

இத்தேசத்தில் மற்றுமொரு முரணுக்குக் காரணம் கீழ்திசை நாகரீகத்திற்கு உறைவிடமாகிய இத்தேசத்தில் வெவ்வேறு குணங்களமையப்பெற்ற கீழத்திசை மேற்றிசை நாகரீகங்கள் இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தலால் ஒரு முரண் ஏற்படா நிற்கின்றது. அவ்விரண்டு நாகரீகங்களின் லக்ஷணங்கள் ஒன்றுக்கொன்று எதிரிடையானவைகள். கீழ்த்திசை நாகரீகத்தில் பிரஜ்ஞையானது அந்தர் முகமாய் நிற்கும் விஷயங்களை மேலாகக்கருதி, அவைகளைப் பின்பற்றி அறிவதற்கு முயலுவதால், இக போகங்களைப் பரத்திற்குச் சாதகமுள்ள வரையில் தான் பின்பற்றுகிறது. ஆனால் மேற்றிசை நாகரீகத்தில் பிரஜ்ஞையானது பகிர் முகமாய் நிற்கும் விஷயங்களை முக்கியமாய்க் கவனித்து, அவ்விஷயங்களைக் குறித்து விசாரணை செய்யும் பூதபௌதிக சாஸ்திரங்களை நன்றாக அறிந்து இவ்வுலகிலுள்ள வஸ்துக்களின் பிரயோஜனங்களை அறநெறியில் அடையும் போக வழியைப் பிரதானமாகக் கைக்கொண்டு நிற்கின்றது. பின்வரும் நூதன நாகரீக நிர்மாணத்தில் மேற்கூறிய இந்நாகரீகங்களின் லக்ஷணங்களைச் சமரசப்படுத்தி அவைகளின் முரண்களை விலக்கி அவைகளை ஒன்றுசேர்த்து ஒரே நாகரீகமாகச் செய்யவேண்டுவதே முக்கிய லக்ஷ்யமாகும்.

***

மேற்கூறியவாறு இதே தேசத்தில் தற்காலத்தில் நிகழும் பலவித எதிர்ப்புகளை நாம் கவனித்து அவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு பிரஹ்மஞானசபைமூலமாய்ப் பெரியோர்களால் வெளியிடப் பட்டிருக்கும் தத்வார்த்தங்கள் மிகப்பயனுள்ளனவாயிருக்கின்றன. இந்நாட்டில் இந்தக்

களுக்குள் பிராஹ்மணர் பிராஹ்மணரல்லாதாரென்ற ஒரு கக்ஷிவாதமானது தற்காலத்தில் ஏற்பட்டு நிற்கின்றது. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னர் வைவஸ்வத மனுவானவர் நான்கு வர்ணங்களை இத்தேசத்தில் குடியேறிய ஆரியர்களுக்குள்ளும் இத்தேசத்திலிருந்த ஏனையோர்களுக்குள்ளும் வகுத்து ஏற்படுத்தினர் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. மனுவைப்போன்ற மகான்களின் அதிகாரத்தின்கீழ் இவ்வருண ஏற்பாடு நிலைநிறுத்தப்பட்டதென்பதற்கு நம்முடைய உயர்வுற்ற பிராசீன சாஸ்திரங்களும், அந்த ஏற்பாடானது அநேக நூற்றாண்டுகளாக வழங்கிவந்தததுமே போதிய அத்தாட்சிகளாகும். உலகத்தின் விகாஸமுறையை ஒழுங்கான வழியில் நடாத்துவோராகிய வெள்ளியம்பலத்தைச் சார்ந்த அதிகார புருஷர்களில் மனுவானவர் ஆட்சித் தலைமை பூண்டவர். அம்மன்றத்தைச் சார்ந்த ஏனைய ஜீவன் முக்தர்கள், உலகத்தின் பற்பல பிரதேசங்களின் முன்னேற்றத்தை மேற்பார்க்கின்றவராய் இடைவிடாது அவர்களது யோக வலிமையாலும் தபோ மகிமையாலும் அவ்வப் பிரதேசங்களின் மேம்பாட்டைக் கைகூடும்படி செய்து வருகின்றனர்.

***

இந்த ஆரியாவர்த்தத்தின் அபிவிருத்தியை அவ்விதம் கைக்கொண்டு விகாஸ முறையில் நமது முன்னேற்றத்தை நடத்துகின்ற ரிஷியானவர் நமது பூர்விக இதிகாஸ புராணங்களில் அடிக்கடி கூறப்படுபவர். அவர் யோகவலிமையிலும் தபோ மஹிமையிலும் வைவஸ்வதமனுவைப் போன்றவர். அவர் பல வழிகளால் நமது தேசத்தைப் புதிய நிர்மாணத்திற்குத் தக்கவாறு அமைக்கும் பொறுப்பை வகித்திருக்கின்றனர். வரப்போகும் புதிய அமைப்பு அல்லது நாகரீகத்தின் முக்கிய லக்ஷணங்கள் என்னவென்றாய்வோம். மனிதர்களுக்குள் சகோதரபாவம் நிகழ வேண்டும்.

அச்சகோதரபாவம் நிகழ வேண்டுமானால் உலகில் ஜனிக்கும் ஜீவர்களில் சிலர் அபரிமிதமான ஐசுவரியங்களை அடைந்து சுகமாயிருத்தலும் பலர் உணவுக்குக் கூட வழியற்று வறுமையுடன் வாழ் நாட்களைக் கழிப்பதும் இருத்தல் கூடாது. உலகில் ஜனிக்கும் ஒவ்வொரு ஜீவனும், அவனுடைய இச்சா ஞான கிரியா சக்திகள் விகாசகதியில் எத்தன்மையான பக்குவ தசையை அடைந்திருக்கின்றனவோ அதற்கு அடுத்தபடியான மேன்மையை அடைந்து இன்னும் மேற் செல்லும் விதமாக அச்சக்திகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு சிறுவன் அல்லது சிறுமிக்கும் தக்கவாறு கல்வி ஒழுக்கம் முதலிய பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். உலகத்தில் இதுவரை நடந்தேறி வந்த தற்கால நாகரீகங்களில் மேற் கூறிய மூன்று அம்சங்களும் அமையப்பட்டிருக்கின்றனவா என்று ஆராயுங்கால், அவைகள் அனுஷ்டானத்தில் அமையப் பட்டுள்ளனவெனத் தோன்றவில்லை. ஆகையால் இப்பொழுது உலகத்தில் நடைபெற்று வரும் நாகரீகங்கள் மாறுதல்களை அடைய வேண்டி நிற்கின்றன.

***

இவ்வுலகத்தில், ஜீவர்கள் மானிட ஜன்மம் எடுக்க இப்பூமியானது தகுதியடைந்த காலமுதல் தற்காலம் வரை ஒன்றின் பின் ஒன்றாய் அநேக நாகரீகங்கள் தோன்றி அழிவுற்றிருக்கின்றன. தானவர்கள் தைத்தியர்கள் முதலானோருடைய சரித்திரங்களும் அவர்களுடைய குணாதிசயங்களும் அவர்களுடைய சௌரிய பராக்கிரமங்களும் அவர்களைச் சூழ்ந்து நின்ற நாகரீகங்கள் முதலியனவும் நமது பூர்வீக இதிஹாஸ புராணங்களில் சில இடங்களில் வெளிப்படையாயும் சில இடங்களில் குப்தமாயும் கூறப்பட்டுள. அந்நாகரீகங்களில் சாசுவதமாய் உள்ள தர்மங்கள் அந்நாக

நீங்கள் நசித்துப் போன காலங்களில் கூடவே நாசமடைந்து மறைபவில்லை. அந்தர்பங்களின் அம்சங்கள் பின் வந்த நாகரீகங்களில் கலந்து அவைகளை முன், மறைந்த நாகரீகங்களைக் காட்டிலும் மேம்பட்டுள்ளனவாகச் செய்தன. இந்நாட்டில் நடைபெறும் நாகரீகத்திற்கு அடிப்படையானது, "பஞ்ச ஜனா" ளாகிய ஆரியர்களுக்குள் வைவஸ்வத மனுவால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்த பலத்தால் இதுவரை தழைத்தோங்கி நின்றது. அதற்குப்பிறகு உலகத்தில் தோன்றின எகிப்து, பாபிலோன், பாரஸீகம், கிரேக், ரோம் முதலிய பிரதேசங்களின் நாகரீகங்களோ வென்றால், அழிவடைந்து பூர்வ கிரந்தங்கள் மூலமாய் மட்டும் ஞாபகத்திற்கு வருவிக்கத் தக்கனவே யல்லாது, தற்கால அனுஷ்டானத்தில் இஞ்சிற்றேனும் தென்படவில்லை. ஆனால் ஆரியா வர்த்தத்தில் உள்ள நாகரீகமோ பூர்ண ஆயுளுள்ளது போலத்தோன்றி இன்னும் நீடுழிகாலம் நிற்கும் போலக் காணுகின்றது. அப்படி அதை நீடூழி காலம் நிலை பெறச் செய்வதில் நமது கடமை யாது?

(பின்னும் வரும்)

அ. அரங்கசாமி ஐயர்.

ஸர் டி. சதாசிவையர் அவர்கள்.

கனம் ஜஸ்டிஸ் சதாசிவையர் அவர்கள் சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்து வந்தவர் 60 வயது முடிந்தவுடன் மேற்படி வேலையை ராஜீனாமாக் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையை அனுசரித்து அந்தவேலையை ராஜீனாமாக் கொடுத்து விட்டனர். அவர்கள் கடைசியாக ஹைகோர்ட்டில் ஆதனத்தில் அமர்ந்திருந்த சமய

த்தில் வக்கீல்களுக்கும் பாரிஸ்டர்களுக்கும் தலைவரான அட்வொகேட் ஜனரல் கனம் ஸி. பி. ராமசுவாமி அய்யரவர்கள் அந்தக் குழுமியிருந்த அனைவோர்களின் மனத்திருந்த நன்மதிப்பை வெளிப்படையாக அழகாய் எடுத்துக் கூறினார். கொஞ்சமும் பக்ஷபாதமின்றி, பணக்காரன் ஏழை, உயர்குலத்தோன், தாழ்குலத்தோன், சர்க்கார், குடித்தனக்காரன், போலீசார், மற்றையோர் எல்லோரையும் சமமாய்ப் பாவித்து, நிர்ப்பயமாய் நீதிசெலுத்தியவர்களில் முதன்மையானவர் என யாவராலும் கொண்டாடப்பட்டவர். உண்மையைக் கண்டு பிடிப்பதில் மிகவும் ஊக்கமுள்ளவர். சட்டமானது உண்மையைக்கண்டு பிடிப்பதற்குச் சாதனமே ஒழிய வேறில்லை என்று துணிந்து, உண்மையைச் சட்டம் மறைக்காமல் பாது காத்துவந்தார். ஒவ்வொரு நிமிஷமும் கடவுள் தன் முன் நிற்பதாகக்கருதி திரிகரணமும் சுத்தமாய் தம்முடைய ஒவ்வொரு காரியத்தையும் கடவுள் கவனிக்கிறார் என்ற துணிபுடன் வேலை செய்தார். அவருடைய உலக அறிவு மிகவும் சிறந்தது உண்மையைக் கண்டுபிடிப்பதில் எவ்வளவு சிரமத்தையும் பொருட்டாக நினையார். தன் முன் வாதிப்போரில் வயதின் மிக்காரினும் இளையவரை அன்பாய் ஆதரித்துக் கேட்பார். ஆகையால் தன் கக்ஷியில் உள்ள முழு பலத்தையும் கூசாமல் அதிகாரிக்குத் தெரியப்படுத்த யாவருக்கும் இயன்று வந்தது. இதனோடு கனம் ஐயர் அவர்களின் சாந்த குணமும் அவையடக்கமும் பொறுமையும் மிகச்சிறந்தன. ஐயர் அவர்கள் இனி நியாயாதிபதி ஸ்தானத்தை வகிக்க முடியாதே யென்ற வருத்தமானது யாவர் மனதிலும் உண்டாயிற்று.

ஆனால் ஐயரவர்கள் இன்னும் சரீரபலமும் மனோபலமும் பொருந்தியவராகவே இருக்கின்றனர். பிரஹ்மஞானத்தை நாடெங்கும் பரவச்செய்வதில் மிகுந்த ஊக்கமுடையவர் என்பது நேயர்களுக்குத் தெரியும். ஆசாரச்சீர்திரு

த்தத்தை ஜனஸமூகத்தில் பரவச் செய்யவேண்டும் என்று மிகுந்த ஆவலுடையவர்கள். மேலும் ஜனங்கள் மதுபானத்தால் மிகவும் சீர்குலைந்து, மதியிழந்து, பொருளை அழித்து, வருந்துகிறார்களே என்று கருணை பூண்டு மதுவிலக்கம் விஷயமாய் ஜனங்களுக்கு உபந்நியாசங்கள் செய்ய வேண்டும் என்று பேரவாக் கொண்டிருக்கின்றனர். ஆகையால் ஒரு சிறு பொழுதும் விருதாவாகக் காலம் கழியாமல் நம் ராஜதானியின் பற்பல பாகங்களில் சென்று ஆங்காங்கு உபந்யாஸம் செய்யத்தலைப்பட்டு விட்டனர். இவர்களது முயற்சி ஸபலமாகுக! ஐயர் அவர்களும் அரோகதிட காத்திராக வெகு காலம் தேசஸேவை செய்வாராக

சென்ற ஜூன் மாதத்தில் ஜார்ஜ் மன்னர்பிரானின் ஜன்மதினத்தன்று கனம் சதாசிவையர் அவர்களுக்கு 'ஸர்' பட்டம் அளிக்கப்பட்டது. அதை அவருடைய நண்பர்களும் மற்ற யாவரும் மிகவும் பொருத்தமுள்ள கௌரவம் என்று கருதுகிறார்கள். ஆங்கிலத்தில் நைட் (Knight) என்ற யுத்தவீரனுக்குத் தான் ஸர் பட்டமுண்டு. நைட் என்பவன் எப்போதும் விழிப்புள்ளவனாக விருந்து கொண்டு ஈசனுக்குத் தொண்டு செய்பவனாய், நியாயத்தை நிலைநிறுத்தவும், அநீதியைக் கருவறுக்கவும் ஏழைகளைப் பரிபாலிக்கவும், சிஷ்டர்களைக் காப்பாற்றவும், துஷ்டர்களைச் சிக்ஷிக்கவும், எப்போதும் நிர்மலமான சீலத்தையுடையவனாக ஒழுகவும் கங்கணம் கட்டிக்கொண்டவன் என்று அர்த்தம். ஸர். டி. சதாசிவையர் அவர்களுக்கு இத்தகைமை நன்றாய்ப் பொருந்தும் என்று நாம் விரிக்கவேண்டியதில்லை. ஆனால் ஐயர் அவர்கள் மிகவும் அவையடக்கத்துடன் இப்பட்டத்தால் விசேஷமாய்ப் பூஜிக்கப்பட்டதாய் நினைக்காமல் ஸதா தான் கோவிந்தனுடைய பக்தன் என்ற பட்டத்தில மிகுந்த ஆதரவுடையவர்களாய் விளங்குகிறார்.

ஆர். அரங்சாமி ஐயர்.

(௬) ப்ரதி ஸ்திரீ புருஷனும் தான் பரிசுத்தத்தன்மையையடைந்து இதரர்களையும், பாலர் பாலிகைகளையும் ப்ரபஞ்சத்தையும் பரிசுத்த ஸ்திதிக்குக் கொண்டு வந்து ப்ரபுவின்வருகைக்கும் தர்ம விருத்திக்கும் சஹாயப்படும்படி செய்யும் சுலபமார்க்கம் ஒன்றுளது இதை விசாரிப்போம். அன்னத்தில் மிளகாய்ப்பொடி போட்டால் காரமாகும். பால் சர்க்கரை போட்டால் தித்திப்பாகும். ஒரு மனிதன் கோபத்துடன் சமையல் செய்வானாகில், அப்பேர்வழியின் கையினின்று கோபம் வெளிப்பட்டு பாகஞ் செய்யும் அன்னத்தில் சேரும். இக்கோப தேஜஸானது அன்னம் முழுமையும் நிரம்பும். அந்த அன்னத்தைப் புசிப்பவர்கள் எல்லோருக்கும் இக்கோபம் என்ற விஷம் வியாபித்து கோபத்தையும் கெட்ட புத்தியையும் பெறுவார்கள். இந்த அன்னம் வயிற்றினிடம் சேர்ந்து கோபத்தோடு நிறைந்த ரக்தமாகும். இக்கோப ரக்தம் உடம்பெல்லாம் வியாபிக்கும். இவ்வித ரக்தத்தில் விஷப்பூச்சிகள் ஏற்படுமென்பதாக டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். சரீரம், நரம்புகள் கெட்டு வியாதி, கெட்ட புத்தி, கோபம் இவைகள் இந்த அன்னத்தைப் புசிப்பவர்களுக்கு உண்டாகும். இந்தப் பாபம் கோபத்தோடு சமையல் செய்தவர்களுக்கு லபிக்கும். இந்த மனிதன் மரணமடைந்த பின்னும் கஷ்டமடைவான்.

ஆகையால் கெட்ட புத்தியோடும் கோபத்தோடும் சமைக்கப்படாது. சிவசிவ ராமராம வென்று கடவுளை தியானித்துக் கொண்டு பாகஞ்செய்யவேண்டும். அவ்விதம் பாகம் செய்தால் அன்னத்தில் இந்தப்பக்தி சேரும். இந்த அன்னத்தைப் புசிப்பவர் எல்லோருக்கும் பக்தி, பூததயை அதிகமாகும். இப்புண்யம் இப்பேர்வழிக்கு உண்டாகும். பக்தனுக்கு சந்தோஷம், நிர்ப்பயம், ஸர்வபூததயை, இம்மூன்று சத்குணங்கள் இருக்கவேண்டும். இவ்விதம் ஸ்திரீ புருஷர்கள் தாங்கள் தினம் தினம் செய்யும் எல்லா நல்ல வேலைகள் நித்திய க்ருத்தியங்கள், வீடு சுத்தி செய்தல், ஜலம்

கொண்டு வரல், சமையல் செய்தல், அன்ன பானாதிகளளித்தல், புசித்தல், குழந்தைகளுக்குப் பால் கொடுத்தல் தான்யம் வஸ்துக்களை உபயோகத்திற்காகச் சித்தப் படுத்துதல், சரக்குகள், பால், தயிர், கறி காய்கள் முதலியவைகளைச் சித்தப்படுத்துதல், கொள்ளல், விற்றல், அளத்தல், நிறுத்தல், துணி நெய்தல், உட்காருதல், துவைத்தல் வண்டியோட்டல், வழிநடத்தல், கடிதங்களுக்குபதில் எழுதுதல், அனுப்புதல், புஸ்தகம் படித்தல், வஸ்துக்களை வைத்தல், பாலர் பாலிகைகளை எடுத்தல், கல்வி கற்பித்தல், பேசுதல், பார்த்தல், சங்கற்பம் சங்கற்பித்தல், முதலாயுள்ள நித்திய கிருத்தியங்களைச் செய்யும் பொழுது, எல்லோருடைய நன்மைக்காகக் கடவுளை தியானித்துக் கொண்டு ஸந்தோஷத்தோடு நிர்ப்பயமாய் கடவுளின் வேலையாகச் செய்தல்வேண்டும். இவைகள் எல்லாவற்றிலும் திவ்ய தேஜஸ் நிறையும். அவ்வித வீடு, அன்னம், ஜலம், வஸ்துக்கள், சரக்குகள், துணிகள், வண்டிகள், நடக்கும் மார்க்கங்கள், காகிதங்கள், புஸ்தகங்கள் முதலியவைகளெல்லாம் பரிசுத்தமாகும். அவ்விதப்பேச்சுக்கள் பார்வைகள், சங்கற்பங்களாலே அநேகர்கள் மேன்மையை அடைவார்கள். அவ்வித வஸ்துக்களையும் துணிகளையும் காகிதம் முதலியவைகளையும் தாக்குபவர்களுக்கும், உண்பவர்களுக்கும், தரிப்பவர்களுக்கும் சம்மந்தமுடையவர்களுக்கும், அவ்வித மார்க்கத்தில் நடப்பவர்களுக்கும் பக்தி, ஞானம், பூததயை உண்டாகும். இவைகள் நமக்குத் தெரியாமல் அநேகர்களுக்கு நல்லபுத்தியை உண்டாக்குவிக்கும். வஸ்துக்கள், வீடுகள், தேசங்கள், பிரஜைக்ள், பாலர், பாலிகைகள் பரிசுத்தர்களாவார்கள். இப்பொழுது ரிஷிகளும் பரமனும் எல்லோருடைய நன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் ஒவ்வொரு நிமிஷமும் திவ்ய தேஜஸை வர்ஷித்து விசேஷமாக அனுப்புகிறார்கள். இவ்வித பக்தர்களுக்கு இந்த திவ்ய தேஜஸ் விசேஷமாக வியாபிக்கும். நல்ல சங்கற்பமுண்டாகி எல்லோருடைய நன்மைக்காக பாடுபடும் ப்ரதி மனிதனும் இதனையடைந்து பரி

சுத்தனவன். இப்படிப்பட்டவர்கள் அதிசீக்கிரத்தில் கிருதார்த்தர்களாவார்கள். ஆகையால் இக்கர்ம யோகத்தை ஒவ்வொருவரும் அப்பியசிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தப்பாமல் பரிசுத்தர்களாவார்கள்.

இதற்கு வேண்டிய ஞானம், சிரத்தை, தைரியம், பூததயை இவைகளை ஜகதீசுவரன் நமக்களிப்பாராக!

வி. பா. நாயுடு — நஞ்சுண்டப்பா.
மொழிபெயர்த்தவர்.

தென்இந்தியா பிரஹ்மஞானக் கன்வென்ஷன்.

அடையாற்றில் 1921 ஹ மார்ச்சு மாதம் 26உ காலையில் நடந்த ஷை கன்வென்ஷன் கூட்டத்தில் முந்திய வருஷத்தின் வருஷாந்த அறிக்கைப் பத்திரமானது கன்வென்ஷன் காரியதரிசியாகிய சகோதர முதலியாண்டான் செட்டியாருக்காக சகோதரர் எஸ். ராஜாராமையரால் வாசிக்கப்பெற்றது. ஸ்ரீமான் முதலியாண்டான் செட்டியாருடைய நேத்திரங்களின் பார்வைத்தாழ்வினால் அவரது வேலையை ஜனவரி மாதமுதல் ஸ்ரீமான் ராஜாராமையர் பார்த்து வந்தார். மேற்படி அறிக்கையிலிருந்து சில முக்கியாம்சங்களைக் கீழே கூறுவோம்.

"இவ்வறிக்கையானது இக்கன்வென்ஷனது 7வது வருஷத்தின் வரலாறாகும். சகோ. பி. பி. வாடியா அவர்கள் இவ்வேழாவது வருஷம் கன்வென்ஷனுக்குப் பிரசிடெண்டாயிருந்தார். அவர் இந்தியாவில் 6 மாதகாலம் வரையில் தானிருக்க முடிந்தது. அதாவது 1920 ஹ ஆகஸ்டு மாதம் முதல் ஜனவரிவரையில் இருந்தார். அதற்கு முன் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் இந்தியத் தொழிலா

ளர்களுடைய பிரதிநிதியாகச் சென்றிருந்த போது, பிரஹ்மஞானவிஷயமாகச் செய்த உபந்யாஸங்களுடையவும் கூடிய கூட்டங்களுடையவும் சங்கை 675. ப்ரஹ்மஞானத்தை அனுஷ்டானத்திற் கொண்டுவரும் வழியைப்பற்றியும், பிரஹ்மஞானத்தைப் பரவச்செய்யும் வண்ணமும் அநேகப் பிரசங்கங்கள் செய்தனர். தொழிலாளர்களுக்குத் தொண்டு செய்வதாகிய ஒரு திருத்தொண்டைத் தமதாக்கிக் கொண்டிருக்கிற நமது பிரசிடெண்டு அதே வேலையாக மீண்டும் இங்கிலாந்து சென்று இருக்கிறார். இங்கிலாந்து போகும் வழியில் மார்செயில்ஸிலிருந்து இந்த சந்திப்பில் வாசிப்பதற்காக அரியதோர் நிருபம் வரைந்து அனுப்பி யிருக்கிறார். அது வாசிக்கப்பெறும். கேட்டானந்திப்பீர்கள்.

“ஸிலோன் தீவில் உள்ள பிரஹ்மஞானக் கிளைச்சபைகளை உற்சாகப்படுத்தும் பொருட்டு ஸிலோனையும் தமிழ்ஜில்லாக்களின் தென்பாகப்பெடரேஷனோடு சேர்க்கவேண்டுமென்று இந்தியன் செக்ஷன் ஜனரல் செக்ரிடெரியவர்களின் அபிப்பிராயத்தோடு தென் இந்திய மாகாணக்காரியதரிசியவர்களும் இணங்கி இக்கன்வென்ஷனுக்கு தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். அதை அங்கீகரிப்பது இக்கூட்டத்தின் பொறுப்பாகும். இக்கன்வென்ஷன் இலாகாவுக்குள் பெடரேஷன் இலாக்காக்கள் இருக்கின்றன. தமிழ்ஜில்லாக்களில் வடக்கு, தெற்கு, மேற்கு, என மூன்று பெடரேஷன்கள் இருக்கின்றன. தெலுங்கு ஜில்லாக்களில் வடக்கு மத்தியம் என இரண்டு பெடரேஷன்களிருக்கின்றன. கர்நாடக பெடரேஷன் ஒன்றும் கோளா பெடரேஷன் ஒன்றும் ஹைதராபாத் பெடரேஷன் ஒன்றும் ஆக எட்டு பெடரேஷன்களில் கடைசியில் கூறப்பட்ட இரண்டைத்தவிர மற்ற பெடரேஷன்களில் பற்பல தேதிகளில் கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன. ஏனங்குடியில் பிரஹ்மஞான ஆலயம் ஒன்று ஏனங்குடி லாட்ஜின் பிரசிடெண்டு சகோ. ராமசந்திரநாயுடு அவர்க

னால் ரூ 18,000 செலவழித்து இனாமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒருபெரிய தர்மமே!

"கர்னாடகபெடரேஷன் இலாக்காவில் மிகவும் ஊக்கமாகவும் சிலாக்கியமாகவும் வேலைசெய்யப் பட்டிருக்கின்றது என்று காரியதரிசி சகோ. ராகவாச்சாரியார் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. சகோ நரஹரிசாஸ்திரியாரின் சுறுசுறுப்பை மிகவும் மெச்சுகிறோம். 43 புது அங்கத்தினர்கள் சேர்ந்ததும், அதில் 17பேர் ஸ்திரீகளாயிருப்பதும், அவருடைய சுறுசுறுப்பைக் காட்டுகிறது. அங்கத்தினர் தமது மனைவிகள் சகோதரிகள் முதலிய ஸ்திரீகளையும் அங்கத்தினராய்ச் சேர்த்தலவசியம் என்று கூறிப்பதை இவர் வற்புறுத்தியிருக்கிறது மெச்சத்தகுந்தது. அசிரத்தையாயிருந்த 20 பழய அங்கத்தினரை இவர் ஊக்கப்படுத்தியும் இருக்கிறார். 14,400 துண்டுப் பத்திரிகைகளை அச்சடித்து ஊர்கள் தோறும் வழங்கியிருக்கிறார். பஜனை கூடங்களில் போய் சாஸ்திரியார் சம்பாஷணைகள் செய்து அவைகளையும் பிரஹ்மஞானத்தை அபிமானிக்கும்படி செய்திருக்கிறார். தென தமிழ் ஜில்லாக்களின் பெட்ரேஷன் காரியதரிசி சகோ கே. எஸ். ராமசந்திரய்யர் அவர்கள் வயதில் மிக்காராயினும் மிகவும் சுறுசுறுப்பாய் பிரயாணம் செய்து, லாட்ஜுகளைப் பார்வையிட்டு வந்திருக்கிறார். மேலும் ஐக்கிய சங்கங்கள் விஷயமாயும், கல்விவிஷயமாயும் இவருடைய முயற்சியானது மிகவும் மெச்சத்தகுந்தது.

"மற்ற பெடரேஷன்களிலும் விசேஷமாக முயற்சிகள் நடந்திருக்கின்றன. இன்னும் அதிகமான ஊக்கத்தைக் காட்டவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"ஜில்லாக் கான்பிரன்ஸ் இலாகாக்கள் 39. அவைகளில் எல்லாம் சுறுசுறுப்புள்ளவைகள் என்று சொல்வதற்கிடமில்லை. 19 ஜில்லாக்களில் தான் ஜில்லாக்கான்பரன்ஸ் நடந்ததாகத் தெரியவருகிறது.

"சகோ நாஹாசாஸ்திரி, எம். சுப்பிரமணிய அய்யர், எல். சுப்பிரமணியய்யர், வி. கருணாகர நாயர், வி. ராமய்யர், இவர்கள் டிராவலிங் ஆர்கனைஸர்கள். எல்லோரும் மெச்சத் தகுந்த வேலை செய்திருக்கின்றனர்.

"சகோதரர்கள் எவ்வளவு பேர் வேலை செய்ய முன் வரினும், அவ்வளவு பேர்களுக்கும் போதுமான வேலையிருக்கிறது. ஆகையால் வேலைசெய்ய முன் வந்திருக்கும் சகோ. சர்வஞாசாரியார், சகோ. பி. ஆர். சுந்தாராஜய்யர் ஆகிய இருவரும் மிகவும் சந்தோஷமாய் வரவேற்கப்படுகிறார்கள்.

"தேசபாஷைகளில் பிரஹ்மஞான தத்துவங்களை எளியநடையில், விளக்கும் சிறிய துண்டுப்பத்திரங்களை இலவசமாய்ப் பரவச்செய்யவேண்டும் என்பது சகோ டி. பி. பாஷ்யாசாரியாரின் பிரேரணை. இதுமிகவும் அவசியம் இதுமுடிய வேண்டுமானல் பணமும், மனுஷ்பர்களும் தேவை. இரண்டும் கைகூடும் என்று நம்புகிறோம்.

"ஸ்திரீகளுக்குள் பிரஹ்மஞானம் பரவவேண்டுமானல் ஸ்திரீகள் உபந்யாஸகர்களாய் அமைவது அவசியம் அதற்கு முன் வருவார் யார்?"

பூர்வ ஜன்ம வாஸனை.

(11-தொகுதி 319-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுக்லபக்ஷ மார்க்கம்:— வாஸனக்ஷயத்தை செய்யும் மோக்ஷ ஹேதுவாயுள்ள காரியங்கள்.

1. நாம் முதலில் துன்மார்க்கத்தையும் மதவைஷம்யத்தையும், அற்பபுத்தி கர்வம் அஹங்காரம் முதலியவைகளையும் விட்டொழிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நம

மிடமிருந்து பரிசுத்த அலைகள் வெளிப்பட்டு எல்லோருடைய சாசுவத அணுக்களிலுமுள்ள துர்வாசனைகளைக் கொல்லும்.

2. சாந்தி சௌக்கியம் இவைகளை விருத்தி செய்ய வேண்டும். எல்லோரிடமும் தயையைக்காட்ட வேண்டும் தேச க்ஷேமத்திற்கும் விருத்திக்கும், எல்லா தேசங்களின் நலத்திற்கும்இயன்றமட்டும் ஸதா பாடுபடல் வேண்டும்.

3. மஹமதியர்கள், பாரசிகர்கள், கிருஸ்தவர்கள், ஹிந்துக்கள், நமது தேசத்திலுள்ள ஸர்வமதஸ்தர்களும் மதத்துவேஷத்தை விட்டு எல்லாமதங்களும் கடவுளால் உண்டானவைகளென்பதாவும், எல்லோரும் பிராத்திருக்கும் கடவுள் ஒருவனேயென்பதாசவும், எல்லோரும் கடவுகளுடைய பிள்ளைகள் என்பதாகவும், ஆகையால், எல்லோரும் சகோதரர்களென்பதாகவும், எண்ணி தேச க்ஷேமத்திற்குப் பாடுபடவேண்டும்.

4. ஒவ்வொரு மனிதனும் இந்திரியங்களையும் மனதையும் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு மாலையில் நித்திரைக்கு முன்னும் காலையிலெழுந்தவுடனும் ஈசுவரனை எல்லாரையும் பரிசுத்தர்களாகச் செய்யவேண்டுமென்பதாகப் பிரார்த்திக்கவேண்டும். எல்லாருடைய பரிசுத்தமும் அதிகரிக்கும்.

5. ராஜயோக அப்பியாஸாதிகளாலே அஹங்காராதிகளை நாசம் செய்து கொண்டு பலாபேக்ஷையில்லாமல் எல்லாருடைய நன்மைக்காகக் கடவுளைத் தியானித்துப் பூஜித்து நித்திய கிருத்தியங்களைப் பகவானுடைய வேலைகளாகச் செய்யவேண்டும்.

6. நிவிருத்திமார்க்கத்தை அனுஷ்டித்துக் கொண்டு நான் ஸர்வ பூதங்களிடத்தும் இருக்கிறேனென்றும், ஸர்வ பூதங்களிடத்துமுள்ள ஆத்மா நானே என்பதாகவும் இதரர்கள் செய்யும் பாபங்கள் லோபங்கள் என்னுடையதென்றும் பாவித்து எல்லாருடைய க்ஷேமமே என் க்ஷேமம் என்

பதாக வெண்ணி எல்லோரும் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டு மென்று ஸதாபாடு பட்டுக்கொண்டும், தியானித்துக் கொண் டும், ஞானயோகாப்பியாஸாதிகளைச் சம்பாதிக்க வேண்டும்' பக்தி ஞானம் பூததயை எல்லோருக்கும் அதிகமாகும்.

7. ப்ரபுவின் வருகையையும், இக்காலத்தில் ரிஷி கள் வர்ஷித்து அனுப்பும் திவ்யதேஜஸை அடையும் மார்க் கத்தையும் எல்லோருக்கும் தெரிவிக்கவேண்டும். பக்தி, நிம்மதி, உறுதி, பூததயை இவைகளை விருத்தியாக்க வேண் டும். இதரர்களிடமுள்ள துற்குணங்களிடத்து மனதைச் செல்ல விடாமல் ஸத்குணங்களையே க்ரஹித்து கௌர விக்கும் அப்பியாஸத்தைப்பலப்படுத்த வேண்டும். இவ் விதம் செய்யின் இது முதல் ப்ரதி நிமிஷமும் ப்ரபுவின் திவ்ய தேஜஸை மென்மேலும் விசேஷமாக நாம் அடை வோம்.

இவ்விதம் செய்யச் செய்ய நம்மெல்லோருடைய சாசு வத அணுக்களில் உள்ள துர்வாசனைகள் நசித்துப் பரிசு த்த தேஜஸ் நிறைந்து சித்தசுத்தி ஏற்பட்டு பரிசுத்தர்க ளாவோம். பூரணர்களாவோம். இவ்வித ஸ்திதியை அடை வதற்கு வேண்டிய விவேகம் அனுஷ்டானம் ஸர்வ பூதஸம த்வம் பூததயை இவைகள் ஜகதீசுவரன் நமக்களிப்பாராக.

சுக்லக்ருஷ்ணே கதீஹ்யேதே ஜகதஶ்ஶாஶ்வதே மதே ॥
ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாऽவர்த்ததே புந: ॥

மேற் சொன்ன பிரகாரம் இந்த லோகத்திற்கு சுக்கில கிருஷ்ணங்களென்ற ஞான அஞ்ஞானப் பிரகாசங்களுள்ள இரண்டு மார்க்கங்கள் சாசுவதமாக ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் ஞானப்பிரகாசமான சுக்கிலமார்க்கம் புனர் ஜன் மமில்லாததாகவும், அஞ்ஞானப் ப்ரகாசமுள்ள கிருஷ்ண மார்க்கம்மீளவும் ஜன்மங்கள் உள்ளதாகவும் இருக்கின்றன.

வி. ரா. நாயுடு
மொழிபெயர்த்தவர்.

நஞ்சுண்டப்பா.

அதிந்திரிய வஸ்துக்களின் உண்மை.

[ஸர், ஆலிவர் லாட்ஜு அவர்கள் செய்த பிரசங்கம்.]

இவ்வுபன்யாஸத்தில் நமக்குப் பழக்கமாயுள்ள விஷயங்களையே பிரஸ்தாபிப்பேன். இம்முகவுரையான உபந்யாசத்தில் அதீந்திரியமான விஷயங்களின் உண்மையைப் பற்றி யாராய்வோம்.

'அதீந்திரியமான' என்றால் அர்த்தம் என்ன? இப்பதத்தைச் சாதாரணமாகப் பிரயோகம் செய்கிறோம். அது கண்ணுக்குப் புலப்படாத என்று மட்டும் பொருள் படாது. கண், காது, ஸ்பர்சேந்த்ரியம், மூக்கு, நாக்கு ஆகிய ஐவகை இந்திரியங்களுக்கும் புலனாகாத என்று பொருள்படும்.

உண்மை என்றால் என்ன அர்த்தம்? இக்கேள்வி கேட்காமலிருப்பதே நலம் என்பேன். ஏன் என்றால் அதற்கு விடை கொடுப்பது எளிதல்ல. ஒருவாறு விடைகொடுக்க வேண்டுமானால், "உண்மையென்றால் மூலாதாரமானது சாசுவதமானது, முக்கியமானது" என்று கொள்ளலாம். இந்திரியங்களுக்குப் புலனாகுமவைகள் கால அளவைக்குட்பட்டவை. அதீந்திரியங்களானவை தான் சாசுவதமானவை.

இதை மனதிற்குத் தெளிவாக்கச் சில உதாரணங்களைக் கூறுவேன். அவைகளைப்பார்த்தால் நான் மதவிஷயமாய் பேசவந்தேனோவென்று யோசிப்பீர்கள். ஆனால் மதச்சார்பாயன்று நான் பேசவந்திருப்பது. பௌதிகசாஸ்திரச் சார்பாகவே நான் இவ்விஷயத்தையும், மற்றும் எவ்விஷயத்தையும் பரிசீலனை செய்கிறது வழக்கம். பொருள், ஆகாயம், காந்த சக்தி—இவைகள் ஆதிய சகலமான பௌதிக சாஸ்திரத்திற்கு விஷயமாகிற சகலத்தையும் சாஸ்திரிக ஆராய்ச்சி முறையால் தான் பரிசீலனை செய்வதே என் கடமை

யாகக் கொண்டுள்ளேன், இதற்கு உதவியாகவே மற்ற சாஸ்திரங்களையும் நான் அப்பியாசம் செய்திருக்கிறேன். ஆனால் நான் கணிதமும் பௌதிக சாஸ்திரமுமே நான் முக்கியமாய் பயின்றவைகள். இதையெல்லாம் நான் முகவுரையாய்க் கூறுவது ஏன் எனில், நான் கொண்ட துணிபு முழுமையும் சாஸ்திர ஆராய்ச்சி வாயிலாக நான் கொண்ட துணிபுகளே யொழிய வேறில்லை யென்று தங்களுக்கு அறிவுறுத்துவதற்காகவே.

இவ்வுயர் விஷயங்களுக்கும் பௌதிக சாஸ்திரத்துக்கும் என்ன சம்மந்தம்? மனதைக் கலக்கும்படியான உன்னத ஸ்தலங்களுக்குச் சிலர் ஆகாய விமானம் மூலமாய்ச் செல்லலாம் அல்லது அவ்வுயரத்தில் உலாவும்படி படம் விடலாம். அது என் கருத்தல்ல. அதில் ஆஸக்தியுள்ளவர்கள் அப்படிச் செய்யலாம். அநேகம் யோகிகள் தம் மனவலிமையால் மேற்கூறிய நுண்மையான பதவிகளை யடைந்திருக்கிறார்கள். அவர்கள் போன மார்க்கமானது சாதாரண ஜனங்கள் நடக்கக்கூடிய நடைபாதையல்ல. சாதாரண ஜனங்கள் அவர்களைப் பின் பற்றுவதற்கு அனுகூலமான ஒரு படிக்கட்டை அவர்கள் கட்டவில்லை. நம்பிக்கையைத் தீபமாய்க் கொண்டு நடப்பது மேன்மையானதாயிருந்தாலும், சாஸ்திரமானது பிரத்யக்ஷத்தைக் கொண்டே செல்லும் இயல்புடைத்து. ஒரே உண்மையைப் பல முறையாய்க் கண்டுபிடித்தால் அது உண்மை யென்பதற்கு உறுதியேற்படும். ஆகையால் நாம் கொஞ்சமும் மயங்காமல் நாம் உண்மையைக் கண்டு பிடிக்க முயலுவோம். முதலில் சாத்தியமில்லாததுபோல் தோன்றும் உண்மையை அவசியம் கண்டு பிடிக்க முடியும்.

முதன் முதல் வஸ்துக்கள் கண்ணுக்குத் தோன்றுவது போல் உண்மையில் இல்லையென்று முதலில் நிரூபணம் செய்கிறேன். ஒரு கவி சிரேஷ்டர் இத்தத்துவத்தையே கூறியுள்ளார். பூமியானது தட்டையாய்த் தோன்றுகிறது;

தோற்றத்தில் இந்த ஒரே உலகம் தான் உள்ளதுபோலக் காண்கிறது. பற்பல வெளிச்சங்களோடு கூடிய ஒரு ஆகாயமாகிய மூடியால் மூடப்பட்டதுபோலத் தோன்றுகிறது. அப்படியே முற்காலத்தவர் எண்ணியிருந்தனர். ஆனால் இது உண்மையல்ல. உண்மையாதெனின், நமது சூரியன் ஆகாயத்தில் காணப்படும் கணக்கிலடங்காத நக்ஷத்திரங்களில் ஒன்று. அநேக நக்ஷத்திரங்களைக் காட்டிலும் பிரகாசத்தில் குறைந்தது. அநேக நக்ஷத்திரங்களைக் காட்டிலும் உருவத்திலும் சிறியது. மற்ற நக்ஷத்திரங்களைச் சுற்றிக் கிரஹங்கள் சுற்றிவருவதுபோல நம்முடைய சூரியனையும் சுற்றிக் கிரஹங்கள் சூழ்ந்து வருகின்றன. அவைகளில் நாமிருக்கும் பூமியும் ஒரு கிரஹம். நமது பூமியானது கைந்நொடிப் பொழுதில் 19 மைல் தூரம் செல்லும் வேகத்துடனே தன்னைத்தானே சுற்றுகிறது. மனிதர்கள் ஈயைப்போல அதைச் சுற்றி ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். பூமியில் உள்ள சமுத்திரங்களும் நிலங்களும் மேற்கூறியபடி ஆச்சரியமான வேகத்துடன் சுற்றி வருகின்றன. கைநொடிப் பொழுதில் 19 மைல் வேகமென்றால் எவ்வளவு வேகம் என்று மனதில் படுகிறதா? இவ்வேகத்திற்கும் பிரங்கி வாயினின்று புறப்படும் குண்டிற்கும் உள்ள தாரதம்மியமானது, வேகமான ரயில்வண்டிக்கும கால் நடைக்கும் உள்ளதைப் போன்றது.

நம் முன்னோர்கள் இவ்வேகத்தை மனதினால் கூட ஸ்மரிக்கமுடியாது. சாஸ்திரத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அநேக உண்மைகளை நாம் முதன் முதல் கேட்டால் நம்பக்கூட மாட்டோம். முதலில் நக்ஷத்திரங்களைப்பற்றி யோசிப்போம். நம்முன்னோர்கள் அவைகளைப்பற்றி என்ன நினைத்தார்கள்? நாம் என்ன நினைக்கிறோம்? நாம் பார்ப்பதும் அவர்கள் பார்ப்பதும் ஒரே ஆகாசம் தான். ஆனால் தோற்றத்திற்குப் புறம்பே நாம் காணும் உண்மையானது எவ்வளவு வித்தியாசமாயிருக்கின்றது. கண்ணுக்கெட்டாத்தூரம் வரையிலும் அப்பாலும் கணக்கில் அடங்காத உலகங்கள் இரு

க்கின்றன. எத்தனையோ பிர்மாண்டங்கள்! அவைகள் எவ்வளவு காலமாய் இருக்கின்றனவோ யாரால சொல்லப் போகும்? தூரதிருஷ்டிக் கண்ணாடியினின் திருஷ்டி அதிகரிக்க அதிகரிக்க காணப்படும் நக்ஷத்திரங்களின் சங்கையும் அதிகரிக்கின்றது.

அமெரிக்காவிலுள்ள வானசாஸ்திரிகள் மிகவும் ஆச்சரியகரமான விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வான சாஸ்திரமே அமெரிக்காவுக்கு உரித்தான சாஸ்திரமாய் விட்டது. ஐரோப்பியர் அநேகர் இவ்விஷயத்தில் அமெரிக்கர்களுக்கு சிஷ்யரா யிருக்கவேண்டியவர்களாவார்கள். 'ஓரையன்' என்ற ஒரு நக்ஷத்திரக்கணத்தை பார்த்து கணக்கிட்டிருக்கிறார்கள். அவை பூமியிலிருந்து சுமார் ஒரே தூரத்திலிருக்கின்றன. அவைகளினின்று நமது பூமிக்குவரும் வெளிச்சமானது அங்கிருந்து இங்குவர 600 வருடங்களாகின்றது. ஒரு கைநொடிப் பொழுதில் 1,80,000 மைல் வேகமாய்ச் செல்லும் வெளிச்சமானது 600வருஷம் வரவேண்டுமானால் எவ்வளவு தூரமாகின்றது மனதால் எண்ணிப்பாருங்கள்!

எண்ணத் தொலையாத் தூரம் வெளிச்சமானது வரவேண்டுமானால் வெளிச்சம் எதன் மூலமாய்ப் பரவுகின்றதோ அந்த ஆகாசம் என்ற திரவியமானது எவ்வளவு சுத்தமாயிருக்கவேண்டும்? வெளிச்சமானது வாயுகோசத்தின் மூலமாயும் அல்லது வேறு எந்த வஸ்துவின் மூலமாயும் சென்றால் ஒரு பாகம் சிதறடிக்கப் படுகின்றது. அப்படியில்லாமல் மிகவும் பரிசுத்தமாகவல்லவோ இவ்வாகாசம் இருத்தல் வேண்டும்! ப்ளேடோ என்ற ஒரு தத்வ சாஸ்த்ரி சுமார் 2200 வருடங்களுக்கு முன்னிருந்தார். அவர் காலத்தில் ஒரு நக்ஷத்திரத்தினிடமிருந்து புறப்பட்ட வெளிச்சத்தை இப்போது தான் நாம் பார்க்கிறோம் என்றால் அந்நக்ஷத்திரம் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது!

ஆகையால் காணப்படுவதுபோல் அல்ல உண்மை. உண்மையை மனதால் தான் கண்டுபிடிக்க இயலும்.

இதுகாறும் மிகப் பெரிய விஷயங்களைப்பற்றி கவனம் செலுத்தினோம். மிகவும் நுண்ணியதைக் கவனிப்போம். இதோ என் முன்னால் ஒரு சிறு லோட்டாவில் தண்ணீர் இருக்கின்றது. அதை உள்ளபடி அறிகிறோமா? இல்லை. அந்தத் தண்ணீரானது அணுக்களாலே ஆயது என்று நமக்குத் தெரியும். அணுக்கள் மிகவும் நுட்பமானவையென்றும் எவ்வளவு சகதி மிகுந்த சூக்ஷ்ம தரிசிக் கருவியிருந்தும் பார்க்க முடியாதென்றும் நமக்குத் தெரியும். முடியாதென்று திட்டமாய் கூறுவது சில காலத்தில் பிசகாய்ப் போனாலும், இவ்விஷயத்தில் தைரியமாய்ச் சொல்வதற்கு நியாயம் உண்டு. ஏன் என்றால், வெளிச்சத்தின் அலையானது மிகவும் நுட்பமானது. ஆனால் அணுவானது வெளிச்சத்தின் அலையைக் காட்டிலும் மிகவும் நுட்பமானது. ஆகையினால் வெளிச்சத்தின் அலைகள் மூலமாய் அணுவைத் தரிசிப்பது அசாத்தியம் எனவே கூறலாம். சமுத்திரத்தில் எத்தனை லோட்டா தண்ணீர் இருக்குமோ அவ்வளவு அணுக்கள் இந்த லோட்டாத் தண்ணீரில் இருக்கின்றன.

நான் சிறுவனாக இருக்கும்போது ஒரு மூலவஸ்துவின் அணு வென்றால், ஒரு பட்டாணிக் கடலையைப் போல் கெட்டியான, மிகச்சிறிய வஸ்து வென்றும் அதைப் பகுக்க வொண்ணாது என்றும் சாஸ்திரஞர் எண்ணியிருந்தனர். ஆனால் 20-வது நூற்றாண்டின் சென்ற 19 வருஷங்களுக்குள் அணுவின் பாகு பாடுகளைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். முற்றிலும் கண்டுபிடிக்காவிடினும் அநேகமாய்க் கண்டு பிடித்திருக்கின்றனர். அதைக் கவனித்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. அணு வென்றால் பகுக்கப் படாத கெட்டியான வஸ்துவல்ல, அது பல அங்கங்களுடையது அதன் வெளிச்சத்தை வர்ணமானி என்ற கருவி

மூலம் பார்த்தால் தெரியவரும். 'க்ளிப்போர்டு' என்ற சாஸ்திரி ஒரு பெரிய பியானோ வென்ற வாத்தியக் கருவியில் எவ்வளவு உறுப்புகள் இருக்கின்றனவோ அவ்வளவு ஒரு அணுவிலும் உண்டு என்றார். எப்படி வாத்தியப் பெட்டியில் பல விதங்களான ஸ்புரணங்களும் அவைகளுக்கேற்றபடி ஸ்வரங்களும் கிளம்புகின்றனவோ அம்மாதிரி அணுவிலும் பற் பல விதமான ஸ்புரணங்களும் அவைகளுக்கேற்ற வர்ணக்கோடுகளும் உண்டாகின்றன. இவை அணுவுக்குத் தக்கபடி வித்யாசப்படும். இதற்குக் காரணம் தெரியாமலிருந்தது. இப்போது கொஞ்சம் கொஞ்சம் தெரிய ஆரம்பித்திருக்கிறது. அது அறிய வேண்டுமானால் மின்சார சாஸ்திரத்தை அறியவேண்டும்.

பொருள் என்பது மின்சாரத்தால் ஆகியது. பொருளின் அணுவென்பது மின்சாரசக்தி நிரம்பியது. தற்காலத்திய கோட்பாடு என்னவென்றால் மத்தியில தக்ஷிணமான மின்சாரபொருளையும் (nuclous of positive electricity) அதை சுற்றி சுழன்றுவரும் வாமமான (negative) எலக்ட்ரான் என்ற மின்சாரப் பொருளையும் கொண்டது ஒரு அணுவென்று சொல்லப்படுகிறது. ஹைட்ரஜன் என்ற ஒரு மூலத்திரவியத்தின் அணுவில் தக்ஷிண மின்சார மத்தியப்பொருளைச்சுற்றி ஒரு வாம எலக்ட்ரான் சுற்றிவருகிறது. இன்னொரு மூலத்திரவியத்தின் அணுவில் ஒரு தக்ஷிண மின்சார மத்தியப் பொருளைச் சுற்றி இரண்டு வாம எலக்ட்ரான்கள் சுற்றுகின்றன. மிகவும் பாகுபாடுள்ள மூலத்திரவியத்தில் சுற்றிவரும் எலக்ட்ரான்கள் 92 ஆம். இவ்வளவு அதிகமான பாகு பாடுகள் உள்ள மூலத்திரவியங்கள் சீக்கிரம் சிதைவுறுகின்றன. சிதைவுறும் போது வெடிக்கின்றன. இது தான் அணுவைப்பற்றிய தாத்காலிக உண்மையறிவு.

ஒரு அணுவில், ஒரு சூரியனைச் சுற்றி 92 கிரணங்கள் சுற்றுகின்றனபோல் தோற்றவில்லையா? என்ன ஆச்சரி

யப்! இவ்வறையை ஒரு 92 எலக்ட்ரான் கொண்ட அணுவாய வைத்துக் கொண்டால், ஒவ்வொரு எலக்டரா னும் ஒரு பட்டாணிக் கடலைப் பிரமாண முள்ளதாகும். இது விஷயங்கள் புதிதாகச் சொல்லவில்லை. அவை உங் களுக்குத் தெரியும். நான் காட்டவந்தது தோற்றத்திற்கும் உண்மைக்கும் உள்ள வித்தியாசத்தைத் தான்.

'ஐன்ஸ்டீன்' என்ற பெயருடைய சாஸ்திரியால் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையைப்பற்றி ஆராய்வோம். அதை எல்லோரும் அங்கீகரிக்கின்றனர். அவருடைய சிஷ்யர் ஆகாயம் என்பதே இல்லை யென்று சொல்கிறார்கள். அது சரியில்லை யென்று நினைக்கிறேன். நான் ஒரு எச்சரிக்கை செய்கிறேன். அதாவது தனக்குத் தெரிந்ததைப்பற்றி ஒருவர் என்ன சொல்லுகிறாரோ அதைக் கவனித்துக் கேட்டுப் பயனடையுங்கள். ஒருவஸ்து இருக்க முடியாது என்று வாதம் செய்தால் அதைப் பிரமாணமாய்க் கொள்ளாதேயுங்கள். அதை ஆராயவேண்டும். நேரில் தெரிந்ததெனக் கூறும் விஷயங்களை ஏற்றுக் கொள்ளாமேயொழிய இருக்கமுடியாதென்றவைகளை ஏற்றுக்கொள்ளத் தகாது.

பொருளை ஆராய்ச்சி செய்பவர்களைக் கண்டால் அவர்களிடம் எனக்கு அபிமானம் உண்டு. ஆனல் சிலர் ஆத்மா உண்டென்பதற்காக பொருள் இல்லை யென்கிறார் கள். ஒன்றையும் இல்லை யெனலாகாது. எல்லாவற்றிற்கும் ஒரு இடம் கொடுக்கவேண்டும். ஆத்மாவைப்பற்றிய றிவது மற்றதைக்காட்டிலும் முக்கியமெனில் நானும் இணங்கு கிறேன். ஆனல் அதற்காக இது அறிய வேண்டியதே யில்லை யெனில், நான் இணங்கேன். எல்லாவற்றையும் சமரஸமாக இணைத்துப் பார்க்கப்பழகவேண்டும்.

ஆர். ரெங்கசாமி ஐயர், ஸர். ஆலிவர் லாட்ஜ்.
மொழிபெயர்த்தோன்.

முக்கிய அறிவிப்பு.

இந்தியன் ஸெக்ஷன் காரியதரிசியவர்கள் பிரஹ்மஞானசபை அங்கத்தினருள் "தியாஸபி-இன்-இந்தியா" என்ற ஆங்கில மாதப்பத்திரிகைக்குப் பதிலாக இப்பூர்ண சந்திரோதயத்தைப் பெற்றுவருபவர்களுக்கு அடியில் கண்டபடி அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். "இந்தியன் ஸெக்ஷன் அமைப்புச்சட்டத்தின் பிரகாரமும் இயற்றப்பட்ட விதிகளின் பிரகாரமும் அந்த ஸெக்ஷனுக்குச் செல்லவேண்டிய வருஷாந்தரக் கட்டணங்களை ஒவ்வொரு வருஷமும் முன்பணமாகவே அனுப்பவேண்டியது. 1920 ௵ செப்டம்பர் ௴ முடிவோடும் 1921 ௵ செப்டம்பர் ௴ முடிவோடும் பூர்த்தியாகிற சென்ற ௵ இந்த ௵த்திற்கும் செலுத்தவேண்டிய கட்டணங்களை அநேகம் அங்கத்தினர்கள் செலுத்தாமலிருக்கிறார்கள். மேற்கண்டபடி கொடுக்க வேண்டிய கட்டணங்கள் இந்த ௵ ஜூலை ௴ 15௳க்குள் அந்தந்த லாட்ஜு காரியதரிசிகள் காசியில் இருக்கும் இந்தியன் ஸெக்ஷன் காரியதரிசியவர்களாபீசுக்கு அனுப்பும்படி இயலுமாறு அங்கத்தினர் அவரவர்கள் லாட்ஜு காரியதரிசிகளிடம் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அப்படி மேற்கண்ட தேதிக்குள் எவர்களுடைய கட்டணங்கள் மேற்படி ஆபீசில் வரவாக வில்லையோ அவர்கள் செலுத்த வேண்டியதாக ஏற்படும் பாக்கியை வசூல் செய்வதற்காக இப்பத்திரிகையின் அடுத்த சஞ்சிகையை வி. பி. யில் அனுப்படும். லாட்ஜுகளுக்குட்படாத அங்கத்தினர் (unattached members) தாங்கள் அனுப்ப வேண்டிய கட்டணங்களை மேற்படி தேதிக்குள் மேபற்டி ஆபீசுக்கு வந்து சேரும்படி நேரே அனுப்பவேண்டும்.

மேற்படி காசி இந்தியன் ஸெக்ஷன் ஆபீசுக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் அங்கத்தினர் தங்களுடைய டிப்ளோமா நம்பரையும் தாங்கள் அந்த லாட்ஜைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இல்லாவிடில், அவர்களுடைய பேரைக்கண்டு பிடிப்பதற்காக அநேக பதிவுப் புஸ்தகங்களைப் புரட்டுவதில் மிகவும் சிரமமும் காலமும் செலவாகிறது. லாட்ஜுகளுக்குட்படாத அங்கத்தினர் தங்களுடைய நம்பரைக் கூறவேண்டும். தங்கள் நம்பர் இன்னதென்று தெரியாத அங்கத்தினர் மேற்படி ஆபீசுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

"ஓம்"

உண்மையறிதல்.

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்,
மெய்ப்பொருள் காண்பதறிவு"

இப்பிரபஞ்சத்தின்கண் தோற்றும் சிருஷ்டிப்பொருள்களில் எப்பொருளேனும் உண்மைப்பெயர் பெற்றுளதா, அன்றிக் கற்பிதப் பெயர் பெற்றுளதா வெனப் பரியாலோசிப்பாமெனின், ஆலோசிப்பதற்குரித்தான பொருள் ஒன்று வேண்டுமெனப் பெற்றும். அவ்வாறு, ஆலோசித்தற்குரித்தான உசிதப்பொருள் யாதெனில் யான், யான் என முன்வரும் சிவபாவனையுற்றிருக்கும் இச்சரீரச்சுமை தாஙகிய இம்மானிடவுருவாம். இத்தேகத்தை ஆராய்வோமெனில், இத்தேகமென நாமமுற்றபொருள் கற்பிதமா அன்றி உண்மையா என ஆராய்வதற்கு முன் இத்தேகமெனும் நாமமுற்ற பொருட்கு வேறு நாமமுமுண்டோவெனவரும் வினவிற்கு விடையாவது. தேகமென்ற பொருட்கே ஆக்கையென்றும், சரீரமென்றும், உடலென்றும், மெய்யென்றும், மேனியென்றும் பல நாமமுள்ளன. இவ்வாறு பல நாமதேயமுற்றிருக்கும் பொருளை ஆராயப்புகின், இப்பல நாமதேயத்தைக் காரணமெனக் கொள்வதா அன்றி இப்பல நாமதேயமுற்ற பொருளைக் காரணமெனக் கொள்வதா வென நோக்குமிடத்து, இப்பல நாமதேயங் காரணமன்று, இப்பல நாமதேயமுற்ற பொருள் காரணமெனப்பெற்றும். அப்பொருளைக்குறிக்க அவசியம் ஓர் நாமம் வேண்டு நிமித்தம், தேகம் என்ற நாமத்தைப் பற்றி விவகரிப்பாம். இத்தேகமென்ற நாமம் கற்பிதமென ஒருவாறமையினும், இத்தேகமென்ற பொருளுளதேயெனவரும் வினவிற்கு விடையாவது. "இத்தேகமென்ற நாமமுற்ற

பொருள் இத்தேகத்தையே பொருளெனப்பற்றி வந்த நாமமா, அன்றிப் பலபாகுபாடுடைய பொருட்கு ஏகதேசக் கற்பிதப் போலிநாமமுற்றதாவென ஆராயுங்கால், ஏகதேசக்கற்பிதப் போலிநாமமெனற் கத்தாட்சியாய் ஓர் புருடனை நோக்கி ஓர் புருடன், இத்தேகத்தைச் சுட்டிக் காட்டுதலை நோக்குங்கால், கரத்தால் மார்பின் கண்ணே சுட்டித் தட்டிக் காட்டுதலை நன்குணர்வாம். சுட்டிக் காட்டிய கரமெனும் அவயவமும் தட்டிக்காட்டிய மார்பெனும் அவயவமும் வெவ்வேறு நாமம்பெற்றுளதே. அதோடும் அமையாது, இத்தேகமென்ற பொருளே குழல், நுதல், புருவம், விலோசனம், காது, நாசி, வாய், நகை, முகம், கண்டம், தோள், முன்கை, அங்கை, விரல், உகிர், மார்பு, முலைக்கண், வயிறு, உரோமம், வரை, இடை, உந்தி, குய்யம், தடை, முழந்தாள், கணைக்கால், புறவடி, பரடு, குதி, கால்விரல், நகம், தாள் என முப்பத்திரண்டு பேதங்களாக நாமம் பெற்றிருக்கின்றது. இவற்றுள் எந்தவுருப்பு தேகமெனும் பெயர் கோடற்பாலது? அவ்வவ்வுருப்பும், தத்தமக்கியைந்த பற்பல பரியாய நாமங்களைப்பெற்றிருப்பதால் தேகமென்னும் பெயரை ஏற்றிலங்கும் பொருள் யாது? அதனை நன்குணர வேண்டுமே. இவ்வகையுறுப்புக்களின் சேர்க்கை யெழுச்சியே தேகமென்கிற பொருளாமெனின், அஃது விகாரமெனப்படுமோ அன்றிச் சுயம்பு எனப்படுமோ? சுயம்பு எனப்படுமெனின் சேர்க்கையென்பதற் கியையாதிருக்க வேண்டுமே. சேர்க்கையுற்றிருத்தலினால் விகாரமெனப்படுமோவெனின் ஒன்றன் கூட்டம், பலவினீட்டம், திரிபினுக்கமென்னும் இந்த முத்தர்மம் யாதெனப்படும்? விகாரமெனப்படுமன்றோ? அவை ஓரினப் பொருள்கள் ஒன்றோடொன்று சேர்ந்து ஓர் முதல் போர் காண்டல் ஒன்றன் கூட்டவிகாரம். அது நெல்லம் பாரமுதலியன போலாம். பலவினப் பொருள்கள் ஒன்றோடொன்று சேர்ந்து ஓர் முதல் போர்காண்டல் பலவினீட்ட விகாரம். அது நால்வகைச் சேனைகள் ஒருங்குற்ற

சைன்ய மென்பதுபோலாம். ஒன்று திரிந்து அதாவது ஒன்று கெட்டு மற்றொன்றாக இருத்தல் திரிதல் விகாரம். அது பாலென்பது கெட்டுத் தயிராதல் போலாம். இம் முத்தர்மத்துள் தேகமென்னும் பெயரை ஏற்கற்பாலது என்ன விகாரமென்னப்படுவது? பலவினீட்டவிகாரமன்றோ, இதனாற் பொருளெனப்படுவதெங்ஙனங்கூடும்? அன்றியும் உறுப்புகளொன்றோடொன்று சேர்க்கையுற்ற ஞான்றும் அச்சேர்க்கை கலைந்தஞான்றும் இருப்பது யாதெனப்படும்? உறுப்புக்களென்னப்படுமன்றோ? தேகமென்கிற பொருளென்பதெங்கே காணோம்? இருக்கின்றவை உறுப்புக்களாகலின், இவ்வுறுப்புக்களை விட்டு இவற்றின் சேர்க்கையை ஓர் முதலெனவும் தேகமென்கிற பெயருக்கியைந்ததெனவும் மயங்கிய மயக்கத்தை யறியாது முன்னர்த் தேகத்தைத் தேகமென்றுணர்ந்த இம்மயக்கத்தை அறிவெனக்கூறிபது அறியாமையெனப்படுமன்றோ? அன்றியும் தேகமென்பது ஓர் ஞான்றுள்ளதா? அதாவது இடைஞான்றுள்ளதா? இவ்விடை ஞான்றோடு, முன்ஞான்றும் பின்ஞான்றுமுள்ளதா? இடை ஞான்றென்பது உறுப்புக்கள் சேர்ந்திருக்கும் ஞான்றென்க. இவ்விடை ஞான்றுள்ளதெனின், முன்ஞான்றும் பின்ஞான்றுமுள்ள உறுப்புக்களில் கிஞ்சித்தேனுமுண்டா? இல்லையன்றோ? ஏனெனின், ஒரு பொருளுள்ள இடத்தில் அஞ்ஞான்றே மற்றொரு பொருள் எங்ஙனமிருக்கும்? இராதே. அதுபோல் இஞ்ஞான்றும் தேகம் இருப்பின், இதற்கு மாறான உருப்புக்கள் இராதிருக்கவேண்டுமன்றோ? இருக்கின்றதால், அவ்வுருப்புக்களின்றித் தேகமென்பதற்குப் பொருளெங்கே இருக்கின்றதெனின், இஞ்ஞான்றுள்ளது, முன்ஞான்றும், பின்ஞான்றுமுள்ள உறுப்புக்களின் இருப்பில் உண்டெனப்பட்டதா? இஞ்ஞான்று உண்டென்பதற்கு அங்ஙனமில்லையே? இதற்கென் செய்தும்? அன்றியும் பொருளென்பது ஓர் ஞான்றுளதாயின், ஏனையவிருஞான்றும் ஏனிருக்கப்படாது? அதுபோல் தேகமெனப்படுவது இஞ்

ஞான்றுள்ளதாயின் முன்ஞான்றும் பின்ஞான்றும் ஏன் இல்லையெனப்படவேண்டும்? இஞ்ஞான்றே இன்றாகலின் முன்ஞான்றும் பின்ஞான்றும் இல்லையென்பதாயிற்று. ஆகவே முப்பொழுதும் இன்மையெனற்கியைந்த தேகமென்பது எப்பொழுதும் எங்ஙனம் இருப்பெனற்கியையும்? இயையாதிருக்கின்றமையின், இத்திண்ணம் நோக்கி இதற்கு பிராக்பாவம், பிரத்தோம்சாபாவம், அன்னியோன்னியாபாவம் அத்தியந்தாபாவம் எனக் கூறியிருக்கின்றனர். இந்நாற்பொழுதும் இன்மையெனப்படும் தேகமாகிய தோற்றத்தை உண்டெனவுணர்வது அறிவெனப்படுமோ? படாமையின் அறியாமையென்பதற்கு முரணன்றென்க. முரணின்றெனத் தெள்ளத் தெளிந்ததால் இத்தேகமென்ற நாமதேயத்தை ஆராய்ந்து போயதில், இத்தேகமெனற்குப் பொருந்த யாது பொருளும் சித்திக்கவில்லையெனப்பெற்றும். இதுபோல், இதுகாறும் அத்தேகமெனும் நாமத்தை யபிமானித்து யான் எனது எனும்பந்தந் தாழ்த்திய சீவனென்னும் பொருளை ஆராயப்புகினும் சிவமன்றி சீவனென்பது முக்காலத்தும் இன்மைப் பொருளென வெள்ளிடைமலைபோல் விளக்கிக் காட்டற்கன்றோ?

சூதசங்கிதையும்.

"மல்லான்மாப் பலவாய்த் தோன்றுவதுஞ் சீவான்மா
பரமான்மா வெனும்பேதந் தோன்றுவதுஞ்
சொல்லுறின் உபாதியாலன்றி மாமுனிவீர் சுபாவத்
தினன்றலீ தெப்படி யென்னிற் கேண்மின்
வல்லகட முதலாய வுபாதி சம்பத்தால் வானந்த பேதமாய்த்
தோன்றுமது போலுணர்வீர்
செல்லவில் வேதாந்த வாக்கியங்களெல்லாம் பரசிவ
னொருவனேயெனத் தெரிவிக்கும் நாளும்.

எனவருவதாலும் உலகிற் சீவபேதமற்று சிவபேதமாய் உலகங்கற்பிதமெனக்கண்டு தெளிந்த வாலறிஞர் உலக சிருஷ்டியாயுள்ள பல பல நாமதேயமுற்ற பொருள்களையும் பல பல பொருள்களாகக் காணாது பலபல நாமதேயமுற்ற கற்பிதப் போலியேயென ஐயமறத் தெளிந்து சர்வஞ்சிவமயமாம் எனும் மகா வாக்கியத்தைப்பற்றி அவ்வரியவாக்கியத்தின் கருத்தை கடைப்பிடியாய் உய்த்துணர்வோமாக.

ஓம்-தத்-ஸத்.

வரகவி, ந. பாக்ஷாசாஹிபு.

The Story of the Other Wise Man.

அர்த்தவான்

அல்லது

மற்றொரு ஞானியின் சரித்திரம்.

கிறிஸ்து பகவான் அவதரித்த பொழுது கிழக்குத் திக்கில் ஒரு நக்ஷத்திரம் உதயமானதாம். அதைக் கண்ணுற்ற சில ஞானிகள் ஞானேந்திரர் அவதரித்து விட்டனர் என்று தீர்மானித்து, அந்த நக்ஷத்திரம் வழிகாட்ட அதன் பின்சென்று, பொன்னும் பூவும் புனுகுங் கொண்டு பாலகிறிஸ்துவைப் பூஜித்தனர் என்று விவிலிய (Bible) நூலிற் கூறியிருக்கிறது. இப்படிச் சென்றவர் மூவர்.

அவ்வாறே பூஜை செய்யப் புறப்பட்டுத் தன் எண்ணம் நிறைவேறுமற் போன நான்காமவன் ஒருவனுமுண்டு. அவனது சரித்திரம் வருமாறு.

இந்த நான்காவது மனிதனது பெயர் அர்த்தவான் (Artaban.) அவன் பாபிலோன் நகரில் (Babylon) ஜால வித்தைகள் செய்து ஜீவனம் செய்து வந்தான். அவன் யாத்திரைக்குப் புறப்படுமுன் தனது ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்றுக் கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு நீலம், ஒரு சிவப்பு, ஒரு முத்து ஆகிய விலையுயர்ந்த இம்மூன்றையும் வாங்கி அவற்றைக் கிறிஸ்து பகவானுக்குப் பாதகாணிக்கையாகச் செலுத்தவென்று வைத்துக் கொண்டான். பின்பு தனக்கு முன் சென்ற மூவரோடுஞ் சேரவேண்டுமென்று ஆவலுடன் வருகையில், வழியின் ஓரமாயிருந்த ஒரு குட்டையினருகில் ஒரு யூதன் ஜ்வரத்தினால் வருந்துவது அவனது கண்ணு

க்குத் தென்பட்டது. கஷ்டதசையிலிருக்கும் தன்னினத்தானுக்குச் சிகிச்சைசெய்யாமல் அப்புறஞ் செல்ல இவனுக்கு மனந்துணியவில்லை. ஆகவே, அவ்விடத்தில் தன குதிரையினின்றும் கீழேயிறங்கி நோயாளிக்கு வேண்டிய ஸௌகரியங்களைத் தேடிக் கொடுத்து அவன் சௌஸ்தமாகுமட்டும் அவனிடம் சிறிது காலம் கழித்தான். இவனது வரவை எதிர்பார்த்திருந்த மற்றையோர் இவன் வராதது கண்டு தங்களுக்கு எங்கே பகவத் தெரிசனை தவறிவிடுகிறதோ என்று பயந்து முன்னே சென்றனர். ஆதலால் இவனுக்கு அவர்களது துணை கிடையாது போயிற்று. பின்பு இவன் பாபிலோனுக்குத் திரும்பிச் சென்று நீலத்தை விற்று, ஒட்டகங்கள் வாங்கிக்கொண்டு பாலைவனங் கடந்து கிறிஸ்து பிறந்த நகரமாகிய பெத்தலம் என்னும் ஊரையடைந்து தன்னுடன் மீதியிருந்த சில்லரையையும் முத்தையுங் கொண்டு மேரி புத்திரரான கிறிஸ்து பகவானுக்குச் செலுத்தச் சென்றான். அந்தோ, இவன் இவ்வூர் சேருமுன்னரே மேரியும் அவரது கணவரான ஜோஸேப்பும் திருக்குழந்தையும் அந்நகரை விட்டுப் புறப்பட்டு எகிப்து (Egypt) நோக்கிப் போய் விட்டனர். மறுநாளே ஒரு பாவமறியாத சிசுக்களின் ஸம்ஹாரமும் (Massacre of the Innocents) ஆரம்பித்து விட்டது.

அன்றையதினம் ஒரு சிறு பெண் தனது தலைச்சன் குழந்தையைத் தன் புடவையின் மடிப்புகளில் மறைத்துக் கொண்டு வாசற்படியோரமாய் நின்று கொண்டிருந்தாள். அவள் இரங்காத பாவியான ஏரது (Herod) ராஜனது ஆட்கள் எந்த க்ஷணம் தான் பத்து மாதம் சுமந்து நேற்றுப்பெற்ற குழந்தையை நமனுலகிற் கனுப்பி விடுவரோவென்று நடுநடுங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ணுற்ற அர்த்தவான் கொலையாளர் வருந்தருண மறிந்து அவள் வீட்டு வாசலில் நின்று கொண்டு அவர்களின் தலை

வனைப் பார்த்து இங்கே என்னைத் தவிர வேறு ஜனங்கள் கிடையாது. என்னை ஒன்றும் இம்சிக்காதே இதோ இந்த இரத்தினத்தை எடுத்துக் கொள் என்று தன்னிடமிருந்த சிவப்பை, யவனிடம் கொடுத்தான். அந்த ரத்தினத்தின் ஜோதியினால் மயங்கின அந்தக் கொலையாளர் தலைவனும் இங்கே குழந்தையில்லை எட்டி நடவுங்கள் என்று தனது ஆட்களுக்கு ஆணையிட்டான். உடனே கொலையாளர் எட்டிப் போனபின் அர்த்தவான் பின் வருமாறு துதித்தான்.

ஸத்திய ஸங்கல்பரான ஸ்வாமி! ஒரு குழந்தையைக் காப்பாற்ற வேண்டி இன்று ஒரு பொய் சொல்லி விட்டேன். என் அபராதத்தைப் பொருத்தருளும், நான் தங்களுக்கென்று கொண்டுவந்த இரண்டு மணிகளும் இதற்குள்ளாக வேறு விதமாயுபயோகமாகி விட்டன என்று கடவுளை துதித்தான். பின்பு மிஞ்சியிருந்த முத்தையேனும் முத்தி நாதனுக்கு அர்ப்பணம் செய்து விடலாமென்ற எண்ணத்துடன் எகிப்து தேசமெல்லாம் சுற்றித் திரிந்தான். ஆயினும் என்? இவனது மனோரதம் நிறைவேறவில்லை.

எகிப்து தேசத்திலிருந்தபடியே புராண படனம் செய்து வருகையில் ஓரிடத்தில் ஞானேந்திரர் ஒரு காரணமுமின்றித் துன்பங்களை யனுபவிப்பார் என்று எழுதியிருந்ததைக் கண்ணுற்று ஒரு வேளை சிறைச்சாலைகளில் நமது பகவான் நமக்குக் காட்சி கொடுக்கலாகுமோ என்று எண்ணி அந்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளைப் போய்ப் பார்த்து வரத் தீர்மானித்தான். அங்கே அவனிடம் பூஜ்யதை பெறக்கூடியவர் ஒருவரையாவது இவன் பார்க்கவில்லை. எல்லோரும் இவனது உதவியையே வேண்டினர்.

இவ்வாருகப் பசித்தோர்க்குப் பசியாற்றியும் உடையிலார்க்குடையளித்தும், நோயாளிகளுக்கு நோயாற்றியும் துவால் மூட்டியும் முப்பத்திமூன்று ஸம்வத்ஸரங்கள்

கழித்தனன். கடைசியாக அவையவங்களெல்லாம் ஒடு ங்கி அலுத்து, உயிர் நீக்கும் சமயத்தில் திரஸ்தலம் என்ற ஜெருஸலத்தை (Jerusalem) வந்தடைந்தான். அப்பொழுது அவனுக்கு இறைவனைத் தரிசனம் செயல் வேண்டுமென்ற அவா ஒன்று மட்டும் மேலிட்டிருந்தது.

அவன் திரஸ்தலம் சேர்ந்ததினம் ரக்ஷண தினத்திற்கு (Passover) மறுநாள் வீதிகளெல்லாம் ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருந்தனர். அவ்வளவு ஜனங்களும் அவ் வூரின் கோவிலின் வடக்கு கோபுர வாசலின் வழியாகக் கொலைக்கூடம் (Golgotha) என்ற ஒரு இடத்தை நோ க்கிச் சென்றனர். அர்த்தவானும் அவர்களுடன் சேர்ந்து போகையில் அவர்கள் "நான் தான் யூதர்களுக்கு அரசன் என்று பிதற்றிக் கொண்டிருந்தான். அவனை இன்று மர த்தில் கட்டி மார்பிலாணி படிக்கப் போகிறோம்." என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்வதைச் செவியுற்றான்.

இதைக் கேட்ட அர்த்தவானுக்கு இன்னது செய்வ தென்று தோன்றவில்லை. அரசனை எப்படி அவனது பிரஜைகள் கழுவேற்றுவர்? மனிதனென்று நினைக்கத் தெய்வமொன்று செய்கிறது. கடவுளின்காரியங்கள் விபரீ தங்களாக விருக்கின்றன. இப்போது கொலையாளர் வசமிருப்பவர் என் இறைவன்தானோ என்னமோ? ஒரு வேளை எனது முத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் அவ ரை விட்டு விடலாகாதா? என்றிவ்வாறாக யோசனைகள் செய்து கொண்டு அர்த்தவான் அந்தக்கூட்டத்தாருடன் டமாஸ்கஸ் (Damascus) வாசல் வரை சென்றான்.

(தொடரும்.)

எஸ். ஆர். அனந்தநாராயணையர்.

ஸந்தியாவந்தனம்.

ஜபம்.

(9-ம்தொகுதி 328-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுந்தர சாஸ்திரி:—ஜபத்திற்காக சங்கல்பம் செய்த மேல் பிராணாயாமம் செய்யுமுன் 'பிரணவஸ்ய' என்று ஆரம்பிக்கிற மந்திரத்தின் கருத்தென்ன?

இராமானந்தர்:—வேதமந்திரங்களை உச்சரிப்பதற்கு முன் அம்மந்திரத்தைக் கண்டு முதன் முதல் உலகத்தார் அறியும்படி வெளியிட்ட ரிஷியின் பெயரைச் சொல்லித் தலையிலும், அந்த மந்திரம் அமைக்கப்பட்டிருக்கும் சந்தஸ் அல்லது விருத்தத்தைச் சொல்லி வாக்கிலும், அம்மந்திரம் எந்த தேவதையை உத்தேசித்து பிரவிருத்திக்கிறதோ அந்தத்தேவதையின் பெயரையும் சொல்லி ஹிருதயத்தையும் தொடுகிறோம். ரிஷியின் பெயரைக்கூறுவதால் மந்திர திரஷ்டாவின் அனுக்கிரஹம் ஏற்படவேண்டுமென்று பிரார்த்தனை. 'சந்தஸ் அல்லது விருத்தத்தைச் சொல்லி வாக்கை ஸ்பாசம் செய்வதால் மந்திரமானது நன்றாய் உச்சரிக்கப்பட்டு வீர்யமுள்ளதாக ஆகட்டும் என்று பிரார்த்தனை. ஹிருதயத்தில் தேவதையைப் பிரார்த்திக்க வேண்டுமாகையால் ஹிருதயத்தைத் தொடுகிறோம். அங்கந்யாசம், கரந்யாசம் செய்வதால் தேகத்தைப் பரிசுத்தம் செய்து மனதைச் சிதரவிடாமலும் கெட்ட சலனங்களும் எண்ணங்களும் உட்புகாமலும் செய்கிறோம். கரந்யாஸத்தால் விரல்களை பரிசுத்தமாகவும் சக்தி வாய்ந்ததாகவும் செய்கிறோம். அங்கந்யாசத்தால் சரீரத்தை மின்சார சக்தி ஓடிப் போகாமல் ஏற்ற சாதனங்களால் பிரத்தியேகப்படுத்தப்பட்ட மின்சார யந்திரம் போலாக்குகிறோம். அப்பால் ப்ராணாயாமம் செய்யவேண்டும். பிராணாயாமத்துக்கு முன் போல் அர்த்தம் கொள்ளவும். பிறகு 'ஆயாதுவரதாதேவி' என்ற மந்திரத்தால் காயத்திரியாகிய வேதமாதாவை ஸ்தோ

த்திரம் செய்கிறோம். பிறகு சாவித்திரி ஸரஸ்வதி யென்ற பல நாமங்களுடைய தேவியை சரீரத்தில் ஆவாஹனம் செய்கிறோம். இவைகள் ஜபத்திற்கு அங்கங்கள். அப்பால் காயத்திரி ஜபம் ஆரம்பிக்கப்படுகிறது. காலையில் காயத்திரி தேவதை என்றும், மத்யாஹ்னத்தில் ஸாவித்ரி என்றும், மாலையில் ஸரஸ்வதி யென்றும், தியானிப்பது உத்தமம். "பரிசுத்தமான அந்தக்கரணத்தோடு ஸ்தோத்திரம் செய்கிறவனைக் காப்பாற்றுவதால் காயத்ரி என்றும், ஸவித்ரு மண்டலத்தில் வசிப்பவளாதலால் ஸாவித்ரி என்றும் பிரபஞ்சத்திற்குத் தாயானதால் ஸரஸ்வதி யென்றும் அந்த தேவி அழைக்கப் படுகிறாள். தேஜஸும், ஜகத்தை சிருஷ்டித்துக் காக்கும் தசையையும் பரமாத்மாவினிடமே காணப்படுவதால் காயத்ரியால் பிரதிபாதிக்கப்படுவது பரமாத்மாவென்று அறியவேண்டியது.

காயத்ரி மந்திரத்தின் தாத்பரியமாவது "ஜகத்தின் சிருஷ்டி ஸ்திதிக்குக் காரண பூதரான தேஜோமயருண ஈசுவரனுடைய மிகவும் உத்தமமான தேஜஸை தியானம் செய்கிறோம் அவர் நம்முடைய புத்திகளை பிரகாசப்படுத்துவாராக." காயத்ரி மந்திரத்தின் ஆரம்பத்தில் 'பூ: புவ: சுவ: என்று மூன்று வியாஹ்ருதிகளை உச்சரிக்க வேண்டும். 'பூ:' என்னும்போது பூலோகத்தையும் 'புவ:' என்னும்போது புவர்லோகத்தையும் 'சுவ:' என்னும்போது ஸுவர்லோகத்தையும் நமது மனதினால் அடையவேண்டும்.

உபஸ்தானம்.

சுந்தர:—உபஸ்தானத்தில் உபயோகப்படும் மந்திரங்களைப்பற்றி விவரமாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இராமா:—"உத்தமே சிகரே தேவி" என்ற உபஸ்தான மந்திரத்தின் தாத்பரியம் வருமாறு. "காயத்ரி தேவி" உபாசகனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அனுக்ரஹித்து

விட்டு தன்னுடைய உன்னத ஸ்தானத்திற்குப் போகும்படி பிரார்த்திக்கப் படுகின்றாள்.'' காலையில் 'மித்ரஸ்ய' என்றும், மாலையில் 'இமம்மேவருண' என்றும், மத்யாஹ்னத்தில் 'ஆஸத்யேன' என்றும் ஆரம்பிக்கின்ற மந்திரங்களையும் உபஸ்தானத்தில் சொல்லப்படுகிறது. அவைகளின் கருத்தாவது:—''மித்ரஸ்ய என்பதற்கு மித்திரனும் ரட்சகனுமானவன் மித்ரன். வேதாந்தங்களினாலும் முற்றிலும் அறியப்படாத மகிமையை உடையவன் மித்ரன். ரட்சிக்கிறவன். த்ராதா. இப்படிப்பட்டவன் மித்ரன், அதாவது பரமாத்மா. பரமபுருஷனின் கீர்த்தியானது இடைவிடாமல் கேட்கப்பட்டவர்களின் மனதிற்கு இன்பமாய் எல்லாராலும் கொண்டாடத் தகுந்தது. அப்படிப்பட்ட கீர்த்தியையுடையவன். ஸகல சேதனங்களுக்கும் தொழில் உண்டாக்குகிறவனும், ப்ருதிவி முதலான ஸகல தத்வங்களுக்கும் ஆதாரபூதனும், ஆச்சரியமாய் எல்லாராலும் போற்றப்பட்டவனுமான ஸ்வயம் பிரகாசனுமான மித்திரனுடைய பிரபாவத்தைப் பாடுவோமாக. மித்ரன் ஜனங்களுடைய தகுதியைத் தெரிந்து கொண்டு அவரவர்களுக்கு ஏற்றபடி தர்மங்களை அனுசரிக்கும்படி செய்கிறார். அப்படிப்பட்ட ஸத்தியரான மித்திரனுக்கு நெய்யோடு கூடிய ஹவிஸைக் கொடுப்போமாக. ஹே! ஆதித்ய! எவன் உம்முடைய விரதத்தைப் பூரணமாய் அனுசரிக்கிறானோ அவன் விசேஷமான விபவங்களை அடையக்கடவன். உம்மால் காப்பாற்றப்பட்டவனைத் தூரத்திலிருந்தும் சமீபத்திலிருந்தும் பாபங்கள் பாதிக்கமாட்டாவாம்.''

'ஆஸத்யேன' என்று ஆரம்பிக்கும் மந்திரங்களுக்கு தாத்பரியம். ''ஜோதிர்மயமான ஸவிதாவானவர் ஸுவர்ணமயமான தேரில் ஏறிப் புவனங்களை நோக்கிக் கொண்டு மரணமில்லாத தேவர்களையும் மரணத்திற்குட்பட்ட மனிதர்களையும் அவரவர்கள் நிலைமைகளில் நிலைநிறுத்திக் கொண்டு ஸத்தியமான மார்க்கத்தில் சுழன்று செல்லுகிறார். இரு

ட்டுக்கு அப்பால் ஜ்வலிக்கிறதும் தேவதைகளுக்குள் சிறந்த தேவதையுமான ஸூர்யனை நாங்கள் பூஜை செய்கிறோம். அதனால் எல்லாவற்றிற்கும் மேன்மையான ஜோதிஸை, பரப்பிரஹ்மத்தை, அடைந்திருக்கிறோம்.

அவருடைய கிரணங்களாகிய குதிரைகள் பிறந்திருக்கிற எல்லாவற்றின் ஹிருதயத்தையும் அறிகிற தேவனான ஸூர்யனை எல்லோரும் நன்கு தெரிசனம் செய்யும் வண்ணம் ஆகாசமார்க்கமாய்த் தூக்கிச் செல்கின்றன.

தேவதைகள் எல்லோருக்கும் முதன்மையானவரும், (அல்லது, கிரணங்களின் ஸமூகமாய் விளங்குகிறவரும்) மித்திரன், வருணன், அக்னி இவர்களின் நேத்திரம் போன்றவருமான, ஸூரியனானவர் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் இவைகளில் தன்னுடைய ஒளியைப் பரப்புகிறார். சகல ஸ்தாவரங்களுக்கும், ஜங்கமங்களுக்கும், சேதனங்களுக்கும், அசேதனங்களுக்கும், ஸூரியனே ஆத்மாவாக விளங்குகிறார்.

பரமாத்மாவினால் ஸ்தாபிக்கப்பட்டதும், பிரகாசமுள்ளதும், வெளிக்கிளம்பிச் செல்வதுமான அந்நேத்திரமாகிய ஸூரியனை நாங்கள் 100 வருஷகாலம் பார்ப்போமாக! நூறு வருஷகாலம் ஜீவித்திருப்போமாக! 100 வருஷகாலம் சகல சம்பத்துக்களையும் அநுபவித்து ஆனந்திப்போமாக! நூறு வருஷம் பலசம்பன்னர்களாக விருப்போமாக! நூறு வருஷம் சகல இந்திரியங்களுடனும் புஷ்களமாக வேதங்களைக் கேட்டுக்கொண்டு வாழ்வோமாக! நூறு வருஷகாலம் வேதங்களை உச்சரிப்போமாக! நூறு வருஷங்கள் ஜெயிக்கப்படாதவர்களாய் வாழ்வோமாக! அப்படி வாழ்ந்து கொண்டு ஸூரியனைப் பார்த்துக் கொண்டிருப்போமாக!

எந்த ஸூரியன் பெரிய ஸமுத்திரத்தினின்று கிளம்பி ஆகாசமாகிற மற்றொரு சமுத்திரத்தின் மத்தியில் நின்று பிரகாசிக்கிறாரோ அந்த ஸமஸ்த பாக்கியத்தையும்

வர்ஷிக்கிற பிரகாசமான நேத்திரத்தையுடைய ஞானமய மான ஸூர்யனானவர் தன்னுடைய நல்ல மனதுடன் என்னைப்பரிசுத்தனாக்கட்டும்."

"இமம்மே வருண" என்ற சாயங்கால உபஸ்தான மந்திரத்திற்குத் தாத்பர்யம் என்னவென்றால். "ஹே வருணபகவானே! என்னுடைய இந்த ஸ்தோத்திரத்தைச் செவி சாய்த்துக்கேளும். என்னை இன்று ஆனந்தமுடையவனாகச் செய்யும். என்னைக்காப்பாற்றும்படி உம்மைப்பிரார்த்தித்து ஸ்தோத்திரம் செய்கிறேன். யஜ்ஞம் செய்யும் யஜமானன் எதைப் பிரார்த்தித்து யாசம் செய்கிறானோ, அதே தீர்க்காயுஸை நான் பிரார்த்தித்து இந்தஸ்தோத்திரம் செய்கிறேன்! மிகவும் மேன்மையான பிரசம்ஸைக்கு உசிதமானவரே! எங்களுடைய ஆயுளைக்குறைக்காதேயும்! நாங்கள் மானிட சுபாவத்தால் உம்முடைய விரதத்தை நாளுக்கு நாள் உல்லங்கனம் செய்தாலும், தேவர்களுக்கு விரோதமான குற்றங்களைச் செய்திடினும், எங்களுடைய அறியாமையினால் உம்முடைய விதிகளை மீறினாலும், அப்பாபங்களுக்காக எங்களை ஹிம்ஸியாதேயும்!

சொக்கட்டான் ஆடும் சூதாடிகளைப்போல, என்ன குற்றம் செய்தாலும், நாங்கள் பொய் சொன்னாலும், அறிவின்மையினால் உம்முடைய ஆணையை மீறினாலும் எங்களுடைய அப்பாபங்களைச் சிதறடியும் எங்களிடம் உமது பிரியத்தை வையும்." மேற்கூறியபடி முக்காலத்திலும் ஸர்வாந்தர்யாமியாயிருக்கிற பரமாத்மாவை மனதினால் ஸ்தோத்திரம் செய்கிறோம்.

சுந்தர:—காலையில் மித்ரனையும், மத்தியான்னத்தில் ஸூர்யனையும், மாலையில் வருணனையும் ஸ்தோத்திரம் செய்வதாகவல்லவா மந்திரங்களினின்றும், அவைகளுக்கு தாங்கள் சொன்ன அர்த்தத்தினின்றும் தெரியவருகிறது? அப்படியிருக்க பரமாத்மாவைப்பற்றி பிரார்த்திப்

பதாக எங்ஙனம் சொல்லுகிறீர்கள்? எனக்குத் தெளிவா யுரைக்கவேண்டும், ஸ்வாமி?

ராமா:—நன்றாகக்கேட்டீர். உபஸ்தானத்தில் உப யோகிக்கப்படும் ருக்குகள் பற்பல வேதபாகங்களின்று எடுக் கப்பட்டிருப்பினும், அவைகளையெல்லாம் உற்று நோக்கின், பரப்பிரஹ்ம வாசகங்களாகவே யிருக்கின்றன. வருணன், ஸூரியன் முதலிய வார்த்தைகளுக்கு மூலஅர்த்தத்தைப் பிரித்து பாஷ்யகாரர்கள் சொல்லியிருப்பதிலிருந்தும், அந்த சப்தங்கள் பரப்பிரஹ்ம வாசகங்கள் என்று அறியவேண் டியது. வெளியில் தோன்றுகிற ஸூரிய மண்டலம் என்ன, அல்லது வேதத்தில் கூறப்பட்ட வருணன் என்ற தேவதை யென்ன, இவை எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருந்து ஸ்ருஷ்டி ஸ்திதிலயங்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பரபிரஹ்மமே இம்மந்திரங்களால் வாச்யர் என்று நாம் பொருள் கொள்ளவேண்டும். ஸந்தியாவந்தனத்திற்கு மிக வும் பண்டிதர்களான அநேகர் பாஷ்யங்கள் எழுதியிருக் கிறார்கள். அப்பாஷ்யங்களை விஸ்தாரமாகப் பார்த்தீரானால் இது நன்கு புலப்படும்.

சுந்தர:— உபஸ்தானத்திற்குப் பிறகு நான்கு திக்கு களையும் பார்த்து நமஸ்காரம் செய்கிறோம். அதற்கும் அதற்குப்பின் செய்யும் மற்ற நமஸ்காரம் முதலிய வற்றி ற்கும் பிரயோஜனம் என்ன?

இராமா:—“ கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, ஆகாயம், பூமி இவ்வாறு திசைகளுக்கும், அவாந்தர திசைகளுக்கும் அந்தந்த திக்குகளின் அதிதேவதைகளுக் கும் நமஸ்காரம் செய்கிறதுண்டு. இன்னும் அனுஷ்டான பேதத்தில், கங்கை யமுனை நதிகளின் நடுவிலிருக்கிற முனிக ளுக்கும் நமஸ்காரம் செய்வதுண்டு. அவர்கள் பரிசுத்தமான அந்தக்கரணத்தோடு எனக்கு சிரஞ்சீவியாயிருக்கும்படி விருத்தி செய்வார்களாக. இவை முதலிய சில மந்திரங்கள்

சிலர்களால் சொல்லப்படுகின்றன. இது பெரியவர்கள் ஆச சந்தியா தேவிக்கும் ஸாவித்ரிக்கும் காயத்ரிக்கும் சாஸ்வதிக்கும் எல்லா தெய்வங்களுக்கும் குருக்களுக்கும், பித்ரு தேவதைகளுக்கும், தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் நமஸ்காரம். நான் கர்த்தனல்ல போக்தா அல்ல. காமம், க்ரோதம் இரண்டுமே செய்தன. காமாபிமானியான தேவதை செய்தது. கோபாதி தேவதை செய்தது. அவ்விருவருக்கும் நமஸ்காரம். பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம் என்னும் இவ்வைந்து பூதங்களுக்கும் நமஸ்காரம். ஓங்காரத்தால் சொல்லப்படுபவனும் ஐச்வரியத்தோடும் கூடியவனுமான நாராயணனுக்கு வந்தனம் சராசரங்களான சகல பூதங்களுக்கும் நமஸ்காரம். காலைமாலை வேளைகளில் நான் நமஸ்கரிக்கும் சந்திதேவதை என்னை ரட்சிக்கட்டும்.”

சுந்தர:—கோபத்தின் தேவதை செய்தது காமாபிமானியான தேவதை செய்தது என்பதற்கு அர்த்தமென்ன?

இராமா:—பரமாத்மாவின் அம்சமான ஜீவாத்மா சுபாவத்தில் யாதொரு கர்மத்திற்கும் பாத்திரனல்ல. பிரகிருதி ஸம்பந்தமான காமம் கோபம் இவைகளால் தூண்டப்பட்டு இந்திரியங்களாலும், மனதாலும் செய்யப்படும் காரியங்களை அஞ்ஞானத்தால் ஜீவாத்மா செய்வதாக பாமர ஜனங்கள் நினைக்கிறார்கள். ஜீவாத்மா கர்த்தனல்லன் என்றும் காமம் க்ரோதம் தான் கர்த்தவென்றும் ஷை மந்திரங்கள் காட்டுகின்றன. மேலும் மனிதன் காமத்தையும் கோபத்தையும், தாளடைவில விட்டுவிடவேண்டுமென்ற அவசியத்தையும் காட்டுகிறது. இவைகள் தான் மனிதனை இகத்திலும் பரத்திலும் சுகமடையாமல் செய்வதற்கு மூலகாரணம். இவைகளை ஒவ்வொருவரும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பரிஷ்காரமாய் அறியவேண்டும். எவனெவன் எந்தெந்த மூர்த்தியை உபாசித்தாலும் எல்லா உபாசனையும் நாராயணனைப்போய் அடைகிறது. எப்படியென்றால், உலகத்தில் பெய்யும் மழை ஜலம் எலலாம் கடைசியில சமுத்திரத்தைச்சேருகிறது எப்படியோ, அப்படி என்று காட்டக்கூடிய மந்திரமான “ஆகாசாத்பதிதந்தோயம்” என்று ஆரம்பிக்கும் சுலோகத்தின் தாத்பர்யத்தைச் சிந்தனை செய்தால் மனதிற்கு எவ்வளவு நைர்மல்யம் உண்டாகிறது!

நான் எனது என்ற அஹங்காரம் மமகாரம் இவைகளை ஒருவன் விடவேண்டியது அவசியம் என்பதைக் காட்

டும் பொருட்டும் அவன் மனோவாக்கு காயம் இவைகளால் செய்யும் காரியங்களை ஈசுவரார்ப்பணம் செய்யவேண்டும் என்னும் கருத்தடங்கிய 'காயேனவாசா'' என்று ஆரம்பிக்கிற சுலோகத்தையும் சேர்த்திருக்கிறார்கள். தேசாசார சிஷ்டாசாரபேதங்களால் சந்தியாவந்தனாதிகளில் மந்திரங்கள் சில முன்னும், பின்னுமாகவும் சில அதிகம் கம்மியாகவும் இருக்கும்.

சுந்தர:—நீங்கள் சொல்வதைப்பார்த்தால், மனிதர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய உயர்ந்த தத்வங்கள் எல்லாம் சந்தியாவந்தனத்தில் அடங்கியிருப்பதாகத் தெரிகிறது. நான் இதுவரை சந்தியாவந்தனத்தின் பரமார்த்தத்தை தெரிந்து கொள்ளாமலிருந்தது என்னுடைய மதியீனமென்றே சொல்லவேண்டும். எனக்குத் தெளிவாக எடுத்துரைத்ததங்களுக்கு அநேக நமஸ்காரம்.

இராமா:—சந்தியாவந்தனத்தின் பரமார்த்தம் இன்னதென்று தெரியாத உபாத்தியாயர்கள் சந்தியாவந்தன மந்திரங்களின் பதார்த்தம் கூடத்தெரியாமல் பையன்கள் "மொட்டை'' உருப்போடும்படி செய்வதால் இக்காலத்திய பையன்களுக்கு சந்தியாவந்தனத்தில் அசிரத்தையுண்டாகி நாளடைவில் செய்யாமலே விட்டுவிடுகிறார்கள். இனிமேலாவது உம்மைப்போல் புரோஹிதவிருத்தியை அனுசரிக்கிறவர்கள் அவர்கள் உபதேசிக்கும் மந்திரங்களின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு அவர்களுடைய விருத்தியை நடத்திவரும்படி பரமதயாளுவான சர்வேசுவரன் கிருபை செய்வாராக!

சந்தியாவந்தனத்தில் உபயோகப்படும் மந்திரங்களின் பதங்களைப் பிரித்து அநேக வித்வான்கள் அர்த்தம் செய்து புஸ்தகங்கள் பிரசுரம் செய்திருக்கிறார்கள். மூலமந்திரம் தெரியவிரும்புகிறவர்களும் பத அர்த்தத்தைத் தெரியவிரும்புகிறவர்களும் ஷை புஸ்தகங்களை வாங்கிப்பார்த்துக் கொள்ளலாம். சந்தியாவந்தனத்தின் மகிமையை இக்காலத்திய துவிஜர்கள் அறிந்து சிரத்தை கொள்ளுமாறு பரமார்த்தத்தை மட்டும் ஒருவாறு சொல்லியிருக்கிறேன்.''

ஓம் தத் ஸத்.

கே. எஸ். இராமசந்திரையர்.